நே 15. விலை 1 அணா REGD. NO. 4 84

திராவிடநாடு

மலர் 12 | 20—6—54 | இதழ் 51

தோழனே!

அது, துயரம் தரும் பாதை!!

[அண்ணல்]

"பேரறிஞனைப் பெற்றெடுத்துள்ள நாட்டிலிருக்கிறோம்; என்ன கவலை நமக்கு?"

"உலகமே ஒன்று திரண்டு எதிர்த்தாலும் அஞ்சோம் — ஆற்றல் மிக்க அந்த அறிஞன், தன்னுடைய சிந்தனையைச் செலவிட்டால் போதும். இந்த உலகமே பஸ்பமாகக்கூடிய ஆயுதங்களை, அளிப்பான்"

"அவனுடைய உழைப்பு இல்லையென்றால், கடந்த உலகப்போரை முடிவுக்குக் கொண்டுவந்திருக்க முடியுமா!"

"கர்மவீரன்! சிறந்த விஞ்ஞானி! பெரிய அறிஞன்! — நமக்கு, ஓர் பொக்கிஷம்"

*

சிறப்பு குறித்து சிந்து பாடினர், அமெரிக்கர்! ஏடுகள் யாவிலும் அவனது படங்கள்! எதற்கெடுத்தாலும் 'அவர் என்ன சொல்லுகிறார்— அவருடைய அபிப்பிராயம் என்ன?' என்ற பேச்சு!

விருதுகள் வழங்கினர், அமெரிக்க சர்க்கார்! ரஷ்யாவையும் பிறநாடுகளையும் வெற்றிக் கண்களோடு பார்த்தவர்!

அவ்வளவு புகழுக்கும் கவுரவத்துக்கும் பாத்திரமான அதே அறிஞன், இரண்டு திங்களாக, கைகட்டிப்பதில் கூறிக்கொண்டிருக்கிறான். குற்றவாளிக் கூண்டிலே, நிறுத்தப்பட்டு, விசாரிக்கப் படுகிறான். சர்க்கார், தான் வழங்கிய அந்தஸ்துகளையெல்லாம், ரத்துசெய்துவிட்டது! அமெரிக்காவின் ஆராய்ச்சிக்கே அவன்தான் தலைவன்—அந்த கவுரவம், ரத்துசெய்யப்பட்டுவிட்டது. விசாரணைக்கூடத்துக்கும் வீட்டுக்குமாக அலைந்துகொண்டிருக்கிறான்.

உலகம், இந்த வேதனையை விசித்திரமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறது. ஏனெனில், உலகமே கண்டு மிரளக்கூடிய அளவுக்கு, மாபெரும் சாதனையைச் செய்தவன், அவன். ஜப்பானியரும், ஜெர்மானியரும் நடாத்திய கடந்த உலகப்போரை, அவன் தயாரித்துத் தந்த அணுக்குண்டுதான், நிறுத்தியது! அந்த அணு ஆராய்ச்சியின், அழியாப் புகழ் பெற்ற, அந்த விஞ்ஞானியைத்தான், இன்று, கூண்டிலே நிறுத்தி, குற்றங்களைச் சுமத்துகின்றனர், கோலேந்தியோர்.

*

"கடிகாரம், வெகுவேகமாய் ஓடிக்கொண்டிருக்கிறது! அதன் ஓட்டத்திலே, அணுசக்தி சம்பந்தமான புதுப்புது விவரங்கள் கிடைத்துக் கொண்டே உள்ளன. அமெரிக்கராகிய நாம் மட்டுமல்ல, ரஷ்யாவும் முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறது. அவர்களும் நாமும் ஒரு புட்டியில் போட்டு அடைக்கப்பட்ட இரண்டு தேள்களைப்போல, சுற்றி வந்துகொண்டிருக்கி

வேலூர் மாநாடு ஒத்திவைப்பு

ஜூன் 19, 20-தேதிகளில் வேலூரில் நடைபெற இருந்த வ. ஆ. மா. தி. மு. க. 2-வது மாநாடு இடம் மாற்றத்தின் காரணமாக ஜூன் 26, 27-தேதிகளில் வேலூர் டவுன் ஸ்டேஷன் எதிரில் நடைபெறும். மற்ற நிகழ்ச்சிகளில் மாற்றமில்லை.

வரவேற்புக்குழு.

றோம். யார் யாரைக் கடித்துக் கொல்வதென்று வேகமாகத் தூர்த்திக் கொண்டிருக்கிறோம்" என்று அந்தப் பேரறிஞன், விஞ்ஞான ஏட்டொன்றிலே தன்னுடைய கருத்தை வெளியிட்டானாம். கூறலாமா! அதுவும், நம்முடைய ஆர்தஸ்தில் வைத்து ரஷ்யாவையும் பேசலாமா!! — இது அமெரிக்கரிடையே, எழுந்த எரிச்சல். அந்தமனவேகனை, இன்று, பெருநெருப்பெடுத்து, துரோகி! சண்டாளன்! தண்டனை அளிக்கவேண்டும்!— என்று தூண்டுமளவுக்கு, கொண்டுவிட்டிருக்கிறது அமெரிக்காவை அழிக்க அவன் சதி செய்யவில்லை! தான் பணியாற்றிய அணுசக்திக் கூடத்தை பட்டமாக, முயற்சிக்கவில்லை! அங்கிருந்து ரஷ்யாவுக்கு ஓடிப்போய் உளவாளியாக மாற எண்ணவில்லை! தன்னுடைய எண்ணத்தை வெளியிட்டான்; அதனால் தான் செய்துவரும் ஆராய்ச்சிகளைக் குறைத்துக் கொள்ளவில்லை. ரஷ்யாவும், முன்னேறுகிறது!— என்று சொன்னான் என்னவில்லை அப்போதுதான், ரஷ்யா ஐட்ரஜன் குண்டு ஒன்றைக் கண்டுபிடித்து பரிசோதனை நடத்தியதாக, பரபரப்பான செய்தி படர்ந்து இருந்தது. அந்தச் செய்தி, உலகையே, அச்சத்திலாழ்த்தியது! அமெரிக்கரிடையே திகிலூட்டியது!!

அத்தகைய ஐட்ரஜன் குண்டை ரஷ்யர், தயாரிப்பதா? அணுக்குண்டைவிடப் பிரம்மாண்டமானதாமே, இது! எப்படிச் செய்யலாம் ரஷ்யர். இந்தக் குண்டுகளைச் செய்யும் சக்தி, நமக்குமட்டும்தானே உண்டு — என்றல்லவோ உலகம் கருதிக்கொண்டிருக்கிறது. அதனை ஒழிக்கிறதே, இந்தச் செய்தி! அதற்கு, ஒத்தூதுகிறாரே, இந்த அறிஞர்!! —இப்படி, ஆத்திரம் அலைமோதவே, கடந்த ஓராண்டுக் காலமாக, பற்பல நடவடிக்கைகள், துவக்கப்பட்டன. சர்க்கார் சார்பிலமட்டுமின்றி தனிப்பட்ட முதாளிகளும் தத்தமது பிரச்சார பீரங்கியை முழக்கிவிட்டனர். பல ஏடுகள், துப்பறியும் கதைகளைப் பரப்பின! சில கதைகள் திரைப்படமாகவும் வெளிவந்தன!! ரஷ்யர், அணுரகசியத்தை அறிய, பல துரோகிகளை விலைக்கு வாங்கியதாகவும், அந்தத் துரோகிகள் இரகசியங்களை மிகவும் சாமர்த்தியமாகப் புகைப்படமெடுத்து அனுப்பியதாகவும்—விசித்திரமான பல படங்கள் வெளிவந்தன. இவ்விதம், தம்மிடமிருந்து 'ரகசியத்தைத் திருடிக் கொண்டு போயினர், ரஷ்யர்! அதனால்தான், அணுக்குண்டைவிடப் பெரிதான ஐட்ரஜன் குண்டைத் தயாரித்தனர்!! — என்று, உலகத்துக்குச் சொல்லவிரும்பினர். இந்த ஆசையின் விளைவாக, பலர்மீது குற்றம் சாட்டப்பட்டது—பலர் பதவிகளிலிருந்து விரட்டப்பட்டனர்—முக்கியமான பொறுப்புகளிலிருந்த சிலர்மீதும் பழி வீசப்பட்டது. அந்தப் போக்கின் விளைவாக, இன்று, யார் அணுகுண்டையே தயாரித்தளித்தாரோ அந்தப் பேரறிஞன், கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கிறான்! பதவிகளிலிருந்து விரட்டப்பட்டு, காலம் கழிக்கிறான்!! அவன், பெயர், ஓப்பன்ஹீமர்.

*

"நீ, ஒரு, சதிகாரன்"

"குருடனும் கூறுவான், அப்படி"

"நீ, ஒரு, கம்யூனிஸ்டு"

"பொருத்தமற்ற குற்றச்சாட்டு"

"அமெரிக்காவை வீழ்த்துவதே உனது நோக்கம்"

"விரும்பினால் — இன்றல்ல—எப்போதோ செய்திருப்பேன்"

"எதிரியின் தாசன், நீ!"

"முறை தவறிச் செல்லுகிறது. பேச்சு. குறைகூற வேண்டுமென்றால், கோணல்பாதை, ஏன் புகுகிறீர்? குற்றம் என்ன செய்தேன்! நாட்டின் விஞ்ஞானத்தை வளர்க்க வியர்வை சிந்தி உழைத்தேனே! அது, தவறு"

"அல்ல. உமது, மனைவி இருக்கிறாரே— அவர், யார் தெரியுமா?"

"இதென்னய்யா! என்னுடைய மனைவி யாரென்பதைப் பற்றி எனக்கா, சொல்லிக் கொடுக்க வருகிறீர்கள்?"

"கோபியாதீர். கூறும், உமது மனைவி..."

"அழகி—அறிவுமிக்கவள். பெயர், கதாரீன் ஹாரிஸன். 1940ல் திருமணம் செய்துகொண்டேன்..."

"அதுதான், தவறு!"

"ஏது?"

"நீர், அவளைத் திருமணம்செய்து கொண்டது..."

"என்ன துணிச்சல்! என் இதயங்கவர்ந்தவளை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டது தவறா? அதை என்னிடமே, கூறுகிறாயா?"

"கோபப்படாதீர் அவள், யார் தெரியுமா!"

"யார்?"

"அவள் ஒரு கம்யூனிஸ்டு!"

*

மனைவி, கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவராம்! அவரை இவர், மணம் புரிந்து கொண்டாராம் அது, தவறாம்—இவ்வண்ணம் ஓப்பன்ஹீமர்மீது, குற்றங்கள் வீசப்பட்டிருக்கின்றன.

'இல்லை! நான் ஒரு கம்யூனிஸ்டு அல்ல எனக்கு விஞ்ஞானம் தெரியுமேயொழிய, வேறு விஷயங்களில் சிரத்தைகிடையாது" என்றெல்லாம் அவர் அலறியிருக்கிறார். நாடு பூராவும் கலங்குகிறது, அவர் குரல் கேட்டு! ஆனால் அமெரிக்க அரசாங்கமோ, கூண்டிலேற்றி தண்டிக்க விரும்புகிறது. அந்தச் செய்கையை, அகில உலகுக்கும் தெரிவித்து, ஆனந்தமடைய எண்ணுகிறது!!

"ஓப்பன் ஹீமர், யார்? ஒப்பற்ற விஞ்ஞானிதான்! அவருடைய அறிவும் ஆராய்ச்சியும் சிறந்ததுதான். ஆனால் அவர் ஒரு கம்யூனிஸ்டின் கணவனும் இப்போதுதான் அறிந்தோம். ரஷ்யா, எப்படி அணுசக்தியைத் தெரிந்துகொண்டது என்று நினைக்கிறீர்கள்? ஆராய்ச்சியாலா! அல்ல, அல்ல; வஞ்சகத்தால். இவர்போன்ற பலரின் சதியால்தான், அங்கேயும் ஐட்ரஜன் குண்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதனையும் இப்போதுதான் தெரிந்துகொண்டோம். இவர் போன்றோரின் காலதாமதத்தால்தான், ரஷ்யா கண்டு பிடித்ததாக அறிவிக்கப்பட்ட பிறகு, நாங்கள் தயாரித்த ஐட்ரஜன் குண்டை வெடிக்கும்படி நேரிட்டது!! எங்களைவிட ரஷ்யர்கள் எந்த விதத்திலும், சிறந்தவர்களல்ல. ஆனாலும், வெற்றி பெறுகின்றனர்! காரணம், ஓப்பன் ஹீமர்கள், இருப்பதால்தான்!", என்று உலகத்துக்குச் சொல்ல

முனைகின்றனர். இந்தப் பெருமைக்காக, பலரைத் தூக்கு மேடைக்கு அனுப்பவும், சிறந்த விஞ்ஞானிகளைச் சிறைக் கூண்டுக்குள் தள்ளவும், சட்டம் தீட்டிவைத்திருக்கின்றனர்.

* * *

சிலிர்த்தாடுகிறதே, தென்றல்!— அது, எமக்கே சொந்தம், என்று செப்பார் எவரும். குளிர்ச்சி தருகிறதே, கோலநிலவு! அது, எங்களுக்கே உரியது எனக் கூறார், எவரும். ஆனால், அவ்வண்ணம் கூறிடும் கோணல் மதியும், எதையும் தம்முடையது எனக் கருதும், தீய புத்தியும், ஆதிக்கம் செலுத்தவிரும்பும் எவருக்கும் ஏற்படுவதுண்டு! இந்த ஆதிக்க ஆசை, வாணிபத்துறையில் 'டிரேட்மார்க்'குகளாகவும், அரசியல் துறையில், 'லேபிள் சண்டை'யாகவும், இருந்து வருகிறது.

தன்னுடையது! தனக்கே சொந்தமானது!!

பிறர் தொடக்கூடாது! பிரியம் காட்டவும் கூடாது!!—இவ்வண்ணம் அடிபிடிச் சண்டையில், ஆதிக்க ஆசை கொண்டோர், ஈடுபடுவர்.

"கனிதான்! தின்றால் ருசிக்கும்!! ஆனால், இருப்பது என்னுடைய கரத்தில் அல்ல — உன்னிடம். எனவே, கனியல்ல; காய்! இனிக்காது! கசக்கும்!!"

ஆதிக்ககாரர்கள், இவ்விதமும், கூறுவர்—தன்னிடமிருக்கும் 'மகாத்மியம்' மகத்தானது என்பதை விளக்க! இந்தக் கூற்றுகளைத் தாண்டி, கோணல் மதிக்குச் சாட்டையடி கொடுப்பதுபோல, கனி யாருடைய கையிலிருந்தாலும் இனிக்கும்—அது, இன்னாரிடமிருந்தால்தான் தித்திக்குமென்பதல்ல— என்கிற உண்மையை மக்கள் உணர்ந்து கொள்ள வருகிறபோது, ஆதிக்கக்காரர்களின் உள்ளத்தில், ஆத்திரம் அலைபாயும்! கனல்கிளம்பும்—கர்ஜனை ஒலிக்கும். அதன் காரணமாக, கனி பெற்றோரிடம் காய்வர்—"எப்படிப் பெற்றான் தெரியுமோ? என்னுடைய தோட்டத்திலிருந்து திருடிக்கொண்டுபோய் விட்டான்! அதனை விதைத்து, அவன் கொல்லையில், கனிமரத்தை வளர்த்துவிட்டான்! காதகன்!!" எனக் கூறுவர். ஓப்பன்ஹீமரின், ஆராய்ச்சி தந்த முடிவு, கனி அல்ல, உலகுக்கு! வெடி!! சாவு தரும், குண்டு ஆனாலும், அதற்கும் உரிமை பாராட்டிக்கொள்ள—அதன் மூலம் தமது திறமையை அறிவிக்க —அப்படி அறிவிப்பதன் மூலம் ரஷ்யாவின் திறமைக் குறைவைத் தெரிவிக்க—முன்வருகிறது, அமெரிக்கா!

மூடமதியெனக்கிறது, உலகம் வேண்டாத போக்கு, என்கின்றனர்; நல்லோர்; அமெரிக்க விஞ்ஞானிகள் பலர் கூடி இக்கெடுமதியைக் கண்டித்திருக்கின்றனர்.

இதுபோன்ற முதலாளித்துவ நடவடிக்கைகளைக் காணும்போது, குமுறலும் எரிமலையும், சூழும்பும் —நாடு பொது! எண்ணங்கள் பொது! அறிவு பொது! — எனக் கருதும் முற்போக்குவாதிகளுக்கு. தான் எனும் மமதையும், தன்னுடையது எனும் திமிரையும்— அழித்தொழித்து, இன்பம்பரவவும், உரிமை பொதுவாகவும், உயிரையும் வாழ்வையும் தத்தம் செய்து போராடுவோர், கண்டிக்காமல் விடார்! கண்ணீர் சிந்தி வருந்தாமலும், இரார்!!

* * *

அமெரிக்காவின் அக்கிரமச் செயல் என்றால் அவ்வண்ணமே சீறிப்பாயும், இங்குள்ள அரசியல் இயக்கம் ஒன்று, சற்றேறக்குறைய அதே மனப்பான்மையுடன் நடந்து வருகிறது. கனி, என்னிடமிருந்தாலே இனிக்கும்!—என்று கூறிடும், கசடனைப்போல.

கடந்த சில தினங்களாகவே, அதன் போக்கை கவனித்து வருகிறோம்—'காய்ச்சல் கட்சி'க்கு வெகு வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது! நாடித் துடிப்புகளைக் கணக்கிட்டுவருகிறோம்—அச்சம் அதிகமாகிறது—ஜன்னி பிடித்துவிட்டதோ என்கிற சஞ்சலம் கூட ஏற்படுகிறது —அந்தளவுக்கு அந்த அரசியல்கட்சியின் காய்ச்சல், அதிகமாயிருக்கிறது. மறந்திடவேண்டாம். மண்ணுலகைத்தன் ஆதிக்கப் பிடியில் வைத்திருக்க விரும்பும் அமெரிக்காவைக் கண்டிப்பதுதான். அக்கட்சி! ஆயினும் அதே ஆதிக்க ஆசையுடன், இங்கே அலைகிறது.

நாமும், கம்யூனிசம் பேசுகிறோமாம்! எமது பாதையும், பொதுவுடைமைப் பூங்காநோக்கிச் செல்வது!— எனக் கூறுகிறோமாம்.

இவர்களுமா, பேசுவது! — என்கின்றனர்.

அதோடுவிடாமல், 'இவர்களுக்கு எப்படித்தெரியும்?' எனவும் எழுதுகின்றனர்.

இந்தக் காய்ச்சல் வளர்ந்து, வாரந்தோறும் ஏட்டின் மூலம் 'பதக்'கவும்' முன்வருகின்றனர்.

விஷமரம், அது! வெட்டினால் தான் வாழ்வு செழிக்கும்—அந்த மரத்தை வெட்டச்செல்லும்போது, ஒத்துழைக்க முன்வருவோரைக் கண்டால், கசடன் கலங்குவான்! காரியவாதிகள் 'அவர்களும் வருகிறார்கள், நாம் மரத்தை வெட்டும் போது, மற்றோர் பக்கத்தில், அவர்களும் உதவிசெய்கிறார்கள்—நல்லது, வருக! வருக!! — வெட்டுவோம், வீழ்த்துவோம், விஷவிருட்சத்தை' என்றே மகிழ்வர். ஒத்துழைக்க வருவோரின் உதவி, துரும்பு அளவேயாயினும், அதனைப் பெற்றுத் துயரை விரைவில் துடைக்கவேண்டுமெனும் ஆசைகொள்வர்.

இந்த ஆசை நம்மிடம் இருப்பதால்தான், நாம் நடந்து செல்லும் பாதையில், எதுவரையில் யாரார் உதவிபுரிகிறார்களோ, அவர்களின் பணியினைப் பாராட்டும் உயர் பண்பைப் பெற்றிருக்கிறோம். ஆச்சாரியார், துரோகி, நாட்டுக்கு! ஆனால், அவர், தனது மகளை, தேவதாசுக்குத் திருமண முடித்ததைப் பற்றி, பாராட்டுகிறோம்—அவரது பணி, அந்தளவில் சிலருக்கு எடுத்துக்காட்டு என்பதால். காமராஜர், செத்த பிணமாம் காங்கிரசைச் சுமந்துகொண்டிருப்பவர்! — எனினும், சாதி பேதத்தால் நம்மைச் சாய்த்திட விரும்புவோரின் திட்டத்தைச் சாடி உடைக்கிறார் என்பதால், அந்தளவுக்கு அவரைப் பாராட்டுகிறோம். உப்பு தேவை! அதுபோல சர்க்கரையும் தேவை! புளிப்பும் வேண்டும்!—ஆனால், உப்பு கிடைத்துவிட்டது என்பதால், எல்லாமே கிடைத்துவிட்டதென்று பொருளல்ல. புளி கிடைத்திருக்கிறது என்பதால்— மீதி எதுவும் தேவையில்லையென்று மறுத்திடார் எவரும். இவ்

வொன்று, ஒவ்வோர் அளவுக்குப் பயன்படுகிறது! தேவைப்படுகிறது!! இந்தக் கூட்டுச் சரக்கு, எல்லாத் துறைகளிலும் வாழ்விழந்துபோன ஒரு சமுதாயத்துக்கு அவசியம் தேவை. அந்தச் சமுதாயத்தை நிர்மாணிக்கப் பாடுபடும் முற்போக்காளர்களுக்கு எங்கிருந்து என்னென்ன உதவி கிடைக்கிறதோ அதையெல்லாம் அனுசரித்து, தன்னுடைய மூல முழக்கத்துக்கு வலிவையும் வாய்ப்பையும் உண்டாக்கிக்கொள்ளவேண்டும்.

"முடியாது! அவனை நான் மதிப்பதா?"

"சாதாரணம்! சாஸ்திரம் நான்கிலும், ஒன்றில்கூட பாண்டித்தியம் பெற்றவனல்ல, அவன்"

"என்ன இருக்கிறது—வெறும் பயல்!"

இவ்வண்ணம், தன்னருகில் நெருங்கவும் யோக்கியதை அற்றவன்—தன்னைப்போல சகலகலா சாஸ்திரங்களையும் அறியாதவன்— என்று திமிரோடு பேசி, உறுமுதலோடு செல்வது, ஆதிக்கக்காரர்களுக்கும், பண்டிபத்ய பீடங்களுக்கும், உரிமையான பாதை—அதே பாதையில் இங்குள்ள அன்பர்களும் செல்ல முனைகிறார்கள்! நாம் கம்யூனிசம் பேசுகிறோமாம்—ரஷ்யாவுக்குச் செல்லப்போவதாகக் கூறுகிறோமாம். எவ்வளவு எரிச்சல் ஏற்படுகிறது, தெரியுமா— இதைக் கூறும்போது! முப்பது ஆண்டுகாலமாக வளர்ந்துவரும் ஒரு இயக்கத்தைக் கட்டிக்காப்போர், தமக்கு ஆர்வத்தையும் ஆசையையும் உண்டாக்கிய ஒரு புதுயுகத்தைப் பார்க்கப் போவதாகச் சொன்னால், அந்தப் புதுயுகத்தின் ஒளிபரப்பிகள் என்று உரிமை கொண்டாடுவோர் மனமுவந்து, 'செல்க! வெல்க! காண்க! வருக!'' என்று வாழ்த்தாமல், கொட்டை எழுத்தில் திட்டுவதற்கான எழுத்துக்களையா பொறுக்குவது? 'ஐயோ—இந்த, தி. மு. க. பொதுச் செயலாளரும், மாஸ்கோ செல்லுகிறாராமே!'', என்ற கலக்கம், மாசுபடிந்த கூடாரத்தையே கலங்கச் செய்யும்—மாளிகைவாசிகளும், மட அதிபர்களும் வேண்டுமானால், திகைக்கவேண்டும். தித்திக்கும் கொள்கையைப் பரப்புவதாகக்கூறிடும், ஒரு முற்போக்குக் கட்சிக்கா ஏற்படுவது? ஆபத்தான போக்கன்றோ, இது! 'அமெரிக்கா'வுக்குமட்டும் சொந்தமான போக்கன்றோ! பொதுவாழ்வில் மிகவும் மட்டமான போக்கன்றோ!!

•

இன்னாருடைய வாயிலிருந்து வந்தால் மட்டுமே, பொன் எனப்படுவது பொன்னாகக் காட்சிதரும்! அந்த 'லேபிள்' மாறி வேறு ஒருவருடைய வாயிலிருந்து வந்தால் அந்தச் சொல், பொன் அல்ல—பித்தளையாக்கிவிடும்!! என்று எண்ணுவது, ஆதிக்க ஆசை. அந்த ஆசை அதிகமானால், நல்ல கொள்கைகள், ஒரு சிலரின் ஏகபோகமாக இருக்குமேயன்றி, நாடு முழுமைக்கும் மணம் பரப்பும் மலராக ஆகமுடியாது. நல்ல கொள்கைகள், குடத்து விளக்காயிருந்தால், வெற்றி பெற முடியாது! மலர், கூடைக்குள்ளே கிடந்தால் மணம் வீசாததுபோல. ஆனால், இதனை; 'சக்தி' அதிகம் வைத்திருக்கிறோம் என்ற எண்ணத்தில் கிடக்கும், அவர்கள் அறியவில்லை.

இந்த ஆபத்துப் பாதையில், அவர்கள், ஏன் செல்லுகிறார்கள் என்பதை நிர்மாணிக்க, 'நாடிப் பரீட்சைகள்' பல நடத்தினோம். வியாதி, காய்ச்சல், என்று விளங்கிற்று! இரண்டுநாளில்—தீர்ந்துவிடும்—ஒருவாரத்தில் போய்விடும்—என நம்பினோம். 'இல்லை! இல்லை!! ஜன்னி கண்டிருக்கிறது' என்று சில வாரங்களாகத் தெரியவருகிறது. வீதியில் உறுமுவதையும், மாடியிலிருந்து அலறுவதையும், அலட்சியப் பார்வையால் பொடிப் பொடியாக்கிவிட்டு, வளர்ந்தோம், நாம். எனினும், இவ்வண்ணம் ஏதேதோ எழுதியும் பேசியும் வருவோர்மீது, அந்த அலட்சியமும் ஆத்திரமும் உருவாவதில்லை— நமக்கு. ஒருவேளை, உடன்பிறந்த பாசம்போலும்! அந்தப் பாசத்தால், அந்த நண்பர்களுக்கு, அவர்கள் நாவிலும் பேனாவிலும், அடிக்கடி நர்த்தனமாடும் அமெரிக்காவின் போக்கைக் சுட்டிக்காட்டியே, விளக்க விரும்புகிறோம்.

ஓப்பன்ஹீமரை, கூண்டிலே நிறுத்துகிறது, அமெரிக்க அரசாங்கம்—காரணம்; தனது ஆதிக்கப் பெருமையை, அகில உலகிலும் நிலைநாட்டிக்கொள்வதற்காக. அதுபோல், எத்தனை ஓப்பன்ஹீமரை கூண்டிலேற்றினாலும், ரோசன்பேர்க் தம்பதிகளைத் தூக்கிலே தொங்கவிட்டாலும், மக்களுக்குப் பொதுவான விஷயங்கள்—நல்லதோ! கெட்டதோ—தெரிந்தே தீரும்.

கூடாது! எமது கூடாரத்திலேயே இருக்கவேண்டும்!!—என நினைப்பது என்றும் வெற்றி தராது.

இதனை நன்கு அறிந்தவர்கள், நீங்கள்! எனினும், 'இவர்களுமா எங்கள் கொள்கையைப் பேசுவது?' என்று ஆதிக்க வெட்கையோடு காய்வதும், சுட வருவதும், கேலிக்குரிய செயல்—மாற்றாரின் எள்ளலுக்குரிய சம்பவம்.

காய்ச்சலுக்குள்ள காரணத்தை, நன்கு புரிந்துகொண்டிருக்கிறோம், நாங்கள். 'நாடி'ப் பரீட்சைகள், பல உண்டு, எம்மிடம். அதையெல்லாம், எடுத்துக்கூறி, சகோதரத்தை வளர்த்துக் கொண்டு, அதன் மூலம் அரசியல் வாழ்வை நசுக்க விரும்பாதீர். வேலைகள் நிறைய இருக்கின்றன! அவைகளைச் செய்யுங்கள்!!—அதைவிட்டு, ஆத்திரமேன் கொள்ள வேண்டும்? நிலவு, யாருக்கும் உரிமையானது! கதிரவனும் அப்படித்தான்!! அதுபோலவே, கழனியும், ஆலையும்! அந்தப் பொதுவுடைமைப் பாதையை விரும்பாததாலேயே, ஓப்பன்ஹீமரைக் குற்றவாளியாக்கி, அப்படியாவது தன்னுடைய ஆதிக்க ஆசையை நிலைநாட்டிக் கொள்ளக்கூடாதா!—என்று அமெரிக்கா, அல்லாடுகிறது.

அந்த ஆசை, ஆபத்தானது. அந்த ஆதிக்கம் ஒழியவேண்டுமென்பதற்காகத்தான், நாம் எல்லாம் பணிபுரிகிறோம். அதனை எண்ணுங்கள்! 'புது ஆதிக்கத்தை' உண்டாக்க முயலாதீர்!—முயற்சி, தெரிகிறது, உங்கள் நோக்கிலும், போக்கிலும். ஆபத்து! மிக ஆபத்து!!

'ஆலன்துரைகள்' சென்றுகொண்டிருக்கிறபாதை. 'ஸ்டாலின்' பாதையில் செல்லும் உங்கட்கு; வேண்டாம். விரைவு, வேதனையாகமுடியும்! காய்ச்சல், குறையட்டும்! கனிவு, பிறக்கட்டும்!!

★

'கோயில் பெருச்சாளிகள்' கூத்து!

பலன் கோரம்; பயன் பூஜ்யம்

கருத்துள்ளோரே, காண்பீர்!

தூக்கமுடியாமல் தள்ளாடி வீழ்ந்தனர்.

ஒருவர் இருவரல்ல—பலர்—எனி னும், துவண்டு சாய்ந்தனர்.

பலருக்கு அடி! ஒரு ஆள், அங் கேயே மாண்டார்!!

தூக்க முயன்ற பொருள் வேறு ஏதுமல்ல—ஒரு பெருச்சாளி!!

*

பெருச்சாளியைத் தூக்க பலரா, தள்ளாடி வீழ்ந்தனரா, ஒரு உயிர் போயிற்று என்று ஆச்சரியமடை வீர்! ஆமாம், நடந்த வாரம், கண் கூடாகக் கண்டனர் மக்கள், காஞ்சி மாநகரில்.

பெருச்சாளியைத் தூக்கிட முடி யாமல் நசுக்குண்டு இறந்துபோ யிருக்கிறார். அவர் என்ன செய் வார்? பெருச்சாளி, அவ்வளவு கனம்—அவ்வளவு பெரியது. அதை விட பளுவும் வலிவும் கொண்ட ஒருவர், அந்தப் பெருச்சாளிமீது உட்கார்ந்திருந்தாராம். பெருச் சாளி!! மேலே ஒரு மனிதர்!!— சர்க்காரிலிருக்கும் மிருக பாது காப்பு சங்கத்தார் எங்கே போயி னர்—அந்த ஆசாமியைப் பிடித்து 'அரெஸ்ட்' செய்யவில்லையா என்று கேட்கிறீர்கள். அவர், மனிதரல்ல! தெய்வம்!!

*

குடம் தண்ணீர் ஓரணா என்று கூவி விற்கப்படும் காஞ்சிமாநகரிலே குடமுழுக்கு விழா நடைபெற்ற தாம், கோயில் ஒன்றுக்கு! செலவு ஒரு லட்சமாம்!! அந்தக் கேளிக்கை யின் ஒரு கட்டமாகவே, இந்த உயிர்போகும் வேதனையும் நடை பெற்றிருக்கிறது. எல்லாம்வல்ல எம் பிரானை, வீதி சுற்றிக் காட்டுவதற் காக, பக்த சிலர்கள் பெருச்சாளி வாகனத்தின் மீதேற்றிக்கொண்டு வந்தனராம்! வீட்டுக்குவீடு, வாகன மேறிய ஆண்டவனுக்கு, தேங்கா யுடைத்தலும் கூடநீப காரியங் களும், சொகுசாக நடைபெற்ற தாம். 'மூஷிகவாகனா! கடவுள் முதல்வனே!! கஷ்டம் தாங்கமுடிய வில்லை எங்களைக் காப்பாற்றி அரு ளும்' என்று தெண்டனிட்டு நின்ற னராம், ஏழைகள்! அவர்களது குறை ஆண்டவனிடம் தெரிவிக்க இருக்கும் 'தினதயாபரர்'கள் வாக னத்தின்மீது ஆடம்பரமாக இருந் தனராம் — பக்தர்கள் செலுத்தும் காணிக்கைகளைப் பெற்றவண்ணம்.

தீனதயாளா! தெய்வரட்சகா! தரி த்திரம் தாண்டவமாடுகிறது வீட்டில்! 'எப்படியா வது எங்களைக் காப்பாற்றும்' என்று வேண்டிக்கொண்டவர்களும் 'ஐயனே! போனமாதம் ஐயாயிரம் தான் லாபம் கிடைத்தது. இந்த மாதம், இரட்டிப்பாக்கு' என்று ஸ்தோத்தரித்தோரும், இன்றைக்கு 'காட்டன்' நம்பர் 68-ல் கட்டியிருக் கிறேன், பணம். அந்த நம்பர் வந்து விடவேண்டுமப்பா! அப்படி வந்தால் ஆயிரம் தேங்காயுடைக்கிறேன்' என்று வரம் வேண்டியோருமாக, ஏராள மானபேர், வீதியிலே வலம் வந்த விநாயகரையும் அவரது அன்னை பிதாவையும் ஆர்வத்தோடு வணங் கினராம்!

அதிலும், ஊருக்கு ஊர் இருக் கும் விநாயகரைப் போன்றவரல்ல, இவர்—சக்திவசன விநாயகர்!—சாதா ரணமானவரல்ல. அன்றோர் நாள், அகில உலக நாயகன் அலர்மேலு மங்கை மணாளன் துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனன் ஸ்ரீமந் நாராயணனே, தன்னிடம் ஓடி வந்து 'சக்தி'யை 'ஸ்டாக்' செய்து கொண்டு போகும்படி செய்த வர்! அத்தகையவரை நோக்கி, அன் பர்களும், பக்தர்களும் தத்தமது குறைகளைக் கூறாமலாயிருப்பர்? நம் பிக்கை கொள்ளாமலாயிருப்பர்! கோயில் தர்மகர்த்தாக்களிலிருந்து, வெளியில் தேங்காய் விற்பவன் வரை, வேண்டித்தானிருப்பர்! அவ் வளவு 'பக்தி' வாய்ந்த தயாளன், தன்னைத்தாங்கிய 'பக்தனை', குடும் பம் கோவென்றழ, குருதிவெள்ளத் தில் அவன் மிதக்க, கூடியிருந்தோர் அலற, சாகும் நிலையில் கண்டிருக் கிறார்! எலும்பைப் பெண்ணுரு வாக்கிய எம்பெருமான்களும், விநாய கரின் அருகிலே இருந்தனராம்— ஆனால், எவரும், அந்த ஏழையின் உயிரை மீட்டதாகத் தெரியவில்லை! இதுபற்றி, எள்ளளவும் சஞ்சலம் கொண்டதாகத் தெரியவில்லை!! வழக் கம்போல் நடைபெறவேண்டிய தாம்பூல நைவேத்யங்களையும், இந்த ஒரு காரியத்துக்காக, பக்தர்கள் செய்யாமலும் நிறுத்தவில்லை—பா மனும், வேண்டாமெனக் கூற வில்லை.

*

காஞ்சி கச்சபேஸ்வரர் கோயி லிலே நடைபெற்ற குடமுழுக்கு விழாவிலே, இந்தக் கோர சம்பவம்! பெருச்சாளி வாகனத்தை—கொடுக் கப்படும் கூலிக்காக — தூக்கச் சென்று, வீதியிலே பிணமாக வீழ்ந் திருக்கிறார், ஒருவர். வாகனமோ, பெருச்சாளி! தூக்கியவரோ, மனிதர்! வலம்வந்தவரோ, விநாயகர். அவருடன், கச்சபேச் வாரும், வலம் வந்து கொண்டிருந் தாராம். கச்சபேஸ்வரன்!—பெயரி லேயே பெருமை தொனிக்கிற தென்பர், பக்தர்கள். கச்சபம், என்றால் ஆமை—தேவரும் அசுரரும் திருப்பாற்கடலைக் கடைந்த போது மத்தாயிருந்த மந்தரகிரியைத் தாங் கியது ஒரு ஆமை—அந்த ஆமையுரு விலிருந்தவர் மகாவிஷ்ணு—அந்த ஆமை, பிறகு பல அட்டூழியங்களைச் செய்ய ஆரம்பித்தது—அதன் கர்வத்தை அடக்கிக் காத்தவர்

எமது கச்சபேஸ்வரன்—அந்த ஆலயத்தின் ஓட்டினைத் தனது அழகுத் தலையிலே இன்றும் அணிந்திருப்பவர்—மூவரினும் தேவரினும் மேலானவர்—என்று பரவசம்பேசிட, பக்தியோடுசொற்பெருக்காற்றுவர், பக்த சிரோன்மணிகள்! ஆனால், பகவானின் காலடியில், ஒருவன் இறந்து போயிருக்கிறான். அவன் குடும்பம், அழுகிறது! அந்த அழுகுரலைக் கேட்டு, ரிஷபவாகனரூடராய் ஏழையின் குடிசைக்கு எழுந்தருளி, 'இந்தா சொர்க்கம்! எல்லோரும் வருக! என்றும் அழைக்கவில்லை, ஆண்டவன். 25 ரூபாய் கொடுத்தால் போதுமா, முப்பது ரூபாய் போதாதா, என்று அவனை இழந்த குடும்பத்துக்கு உதவி செய்வது பற்றிக் கூடிக் கூடிப்பேசுகின்றனராம், தர்மகர்த்தாக்கள்.

•

விழியில் நீரையும் வேதனையும் தரக்கூடிய வகையில், இதுபோன்ற செய்திகள், அடிக்கடி நிகழுகின்றன. ஆண்டவனின்பெயரால், வீண்செலவுகள் ஏற்படுவது மட்டுமின்றி, அதனால் ஏற்படும் தொல்லைகள் அனந்தம். அதைப்பற்றி, எவருமே, கவலைப்படுவதில்லை நாட்டில். ஆண்டவனை, வீட்டிலே வைத்து, இருதய பூர்வமுடன் தொழுவதைப்பற்றி யாருக்கும் தோன்றவில்லை! ஆனால் 'பப்ளிக்நியூசன்ஸ்' ஆக்கி ஆண்டவனின் மதிப்பையும் தங்களுடைய மதிப்பையும் கெடுத்துக் கொள்கிறார்கள், சிலர்!!

சமுதாயத்தின் புல்லுருவிகளான அந்தச் சிலரின் அட்டகாசத்தைப் பற்றி, திராவிடத்தில் வாழும் அரசியல் கட்சிகள் எதுவும் கவலைப்படுவதில்லை. இந்த இழிநிலையைப் போக்க முயற்சிகளும் நம்மீது காய்கின்றன. 'இதையெல்லாமா, பேசுவது! இதைப்பற்றியெல்லாம் பேசிவிட்டால் கட்சி எவ்வளவு வளரும் தெரியுமா?' என்றெல்லாம் போதனை புரிய வருகிறார்கள்.

ஆண்டவனின் பெயரைக்கூறி நடத்தப்பெறும் அக்கிரமங்களைப் பலர் கண்டித்து வருகிறார்கள்—இங்குமட்டுமல்ல, எங்கும்—அந்த வகையில் இரண்டொரு தினங்களுக்கு முன்பு ஒரு ஏட்டினைக் கண்டோம்—தென் மலபாரிலிருந்து வந்தது — ஆலத்தூர் சித்தாசிரமத்தார் வெளியிட்டிருப்பது—மலையாளத்தில் பிரமானந்தசுவாமி அவர்கள் தீட்டியதன் மொழிபெயர்ப்பு—ஆண்டவனைத் தேடி அலைந்தபின், உண்மை ஞானம் பெற்றவர், அவர். கேரளகுரு! இதோ, கேளுங்கள்:-

"உருவ வழிபாட்டால் இம்மை, மறுமையின்பங்களும், முக்தியுமில்லை. நோக்குவீர்களாக! ஆயிரக்கணக்கான வருடங்களாக, ஆயிரக்கணக்கான பணத்தைச் செலவு செய்து கோயில்கட்டி உருவ வழிபாடு செய்தும், செய்வித்தும் வருகின்ற இந்து அரசர்கள் தங்கள் அரசுரிமை யிழந்து முஸ்லீம் அரசர்களின்கீழ் நீணடகாலம் துன்புற்று காலம் கழித்தனர். ஆங்கில அரசாட்சியின் கீழிருந்திருக்கின்றனர். பார்ப்பனர் உருவ வழிபாட்டை விட்டுவிட்டு ஆங்கில மொழியைக் கற்றுத் தேர்ந்து வழக்கறிஞர் உதவி நீதிமன்றத் தலைவர், உயர் நீதிமன்றத் தலைவர் முதலிய ஒவ்வோர் அலுவல்களை மேற்கொண்டும், பயிர்த்தொழில், வாணிபம் முதலிய பற்பல தொழில்களை மேற்கொண்டும், பணமும் புகழும் தேடத் தொடங்கிவிட்டனர். தற்போது உத்தியோகத்திலிருப்பவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்களே. ஏனைய ஜாதியில் அத்துணை உத்தியோகஸ்தர்களில்லை. உருவ வழிபாட்டால்செல்வாக்கு உண்டாகுமாயின், பார்ப்பனர் அதனை விட்டு, பற்பல வியாபாரங்கட்குப் போகமாட்டார்கள். உருவ வழிபாட்டால் செல்வம் பெருகுமாயின், நம் அரசர்களின் சக்கிரவர்த்தி ஸ்தானம் போயிருக்காது. சில அரச குடும்பம் வறுமை நிலைக்கும் வந்திராது. உருவ வழிபாடு செய்வதனால் நோய் நீக்கமும உண்டாகாது. உண்டாகுமாயின், பார்ப்பனர்களும், அரசர்களும் ஆங்கில மருத்துவர்களையும், நாட்டு மருத்துவர்களையும் வரவழைத்து சிகிச்சை செய்விக்கமாட்டார்கள். உருவ வழிபாட்டால் ஸந்தான விருத்தியுமுண்டாகாது. உண்டாகுமாயின், பார்ப்பனர்களுள்ளும், சில அரசர்களுள்ளும் ஸந்ததியில்லாமல்போதற்கோ சிலருடைய வம்சமே நாசமாவதற்கோ காரணமில்லை. உருவ வழிபாடு செய்வதனால, மனத்தூய்மை, சமநோக்கு ஞானம் முதலிய நற்குணங்களும் உண்டாகா. உண்டாகுமாயின், பார்ப்பனர், ஒரே ஜாதியினராகிய மனிதர்களை 'நீ சூத்திரன்' அசுத்தன், உன்னைத் தொட்டால் குளிக்கவேண்டும், 'நீ தாழ்ந்தவன்' நீ அருகாமையில் வரக்கூடாது. தூரவிலகிப் போ! என்று கூறி விலக்கமாட்டார்கள். மனத்தூய்மையும், சமநோக்கும், ஞானமும் வராமல் முக்தி கிட்டாதென்றே பிரபல பிரமாணங்கள் கட்டளையிடுகின்றன. அறிஞர்களின் அனுபவமும் அவ்வாறே. மேலே கூறிடபோந்த காரணங்களால் பல ஆயிர வருடங்களாக பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து உருவ வழிபாடு செய்துவருகின்ற பார்ப்பனர்களேனும் செல்வப்பெருக்கோ, நோய் நீக்கமோ, மனத்தூய்மையோ ஞானமோ, முக்தியோ சித்திக்கவில்லையென்பது அனுபவமாகிறது. இந்நிலையில் சூத்திரர் முதலாயினோர்க்கு உருவ வழிபாட்டால் கிடைக்கபோவதென்னவோ? ஒன்றுமில்லை. உருவ வழிபாடு முதலிய கன்மங்கட்கு உரித்தானவர்கள் என நூல்களால் கோஷிக்கப்படும் பார்ப்பனர் முதலாயினோர்க்கே அவற்றாலாயதொன்றும் சித்தித்துக் காணப்படவில்லை. இவ்வாறிருப்ப, அவற்றிற்குரியவரல்லர், எனவும் அவற்றைப் பின்பற்றினால் அழிந்தே போவர் எனவும் சாஸ்திரத்தால் விதிக்கப்பட்ட சூத்திரர் முதலாயினோர்க்குப் பின்னர் கிடைக்கப் போவதென்னை? அழிந்து போதலோ? உருவ வழிபாடு முதலியவற்றால் சூத்திரன் அழிந்துபோவன்

26, 27-6-54 தேதிகளில் வேலூர் மாநாடுகள்.

என்றன் ஸ்ரீ சிவபுராணம் கூறுகிறது?

ஜபஸ்தபஸ்தீர்த்தயாத்ரா
ப்ரவ்ரஜ்யா மந்த்ர ஸாதனம்
தேவதாராதனஞ்சைவ
ஸ்திரீசூத்ர பதனானி ஷட்

இதன் பொருள்:- ஜபம், தவம், புனித நீராடல், ஸந்யாஸம் உருப்போடல், சித்தியடைதல், பூசை (உருவ வணக்கம்) முதலிய ஆறுகன்மங்களை பெண்மக்களும், சூத்திரர்களும் செய்வார்களாயின் அவர்கள் அழிந்து போவார்கள்.

மேற்கூறியவாறு நூல் கூறுகின்றமையால் சூத்திரர் முதலானோர் உருவ வழிபாடு செய்வார்களாயின் அழிந்துபோவர் என்பதில் ஐயமுண்டோ? பெண்மக்களும், சூத்திரர்களும்மட்டுமின்றி, பார்ப்பனர்களும், ஏனைய எல்லா மக்களும் உருவ வழிபாட்டால் அழிந்து போவர் என்பதே ஞானிகளின் அபிப்பிராயமாகும். அன்பர்களே! பிம்பப்பிரதிஷ்டையைச் செய்கின்ற ஆச்சாரியார்களையும நோய் முதலிய துன்பங்கள் பற்றி வாட்டுகின்றன. அவற்றினை நீக்குதற்கான சக்தியை சிறிதும் அவர்களிடம் காணவில்லை. ஞானமும் காணப்படவில்லை. அத்தகையினரால் பிரதிஷ்டிக்கப்பட்ட கல்லுக்கு, உங்களுடைய நோய் முதலிய துன்பங்களை நீக்கவும், செல்வப் பெருக்கையுண்டாக்கவும், ஞானம், முத்தி முதலியவற்றைத் தரவும் கூடுமெனக் கருதி நீங்கள் அவர்களின் பேச்சைக் கேட்டு கோயில் கட்டி பணத்தை விரையமாக்கப் புறப்படுதல் அறியாமையன்றோ? விக்கிரகங்களுக்கு யாதொரு சக்தியுமில்லை. புகழ்பெற்ற சில கோயில்களில் திருடர்கள் புகுந்து அளவற்ற பொருள்களைத் திருடிச் செல்வதைக் காண்கின்றோம். சில கோயில்களில் பிரதிஷ்டித்துள்ள பிம்பங்களையும் தோண்டியெடுத்துத் தலைகீழாய் நாட்டின கதைகளும் நாம் அறிந்திருக்கின்றோம். ஒரு எறும்பினாலும் ஒரு கொசுவினாலும் செய்யக்கூடிய பதில் நடவடிக்கை கூட விக்கிரகங்களால் செய்வதற்கியலவில்லை. பிரதிஷ்டைக்கு காரணகர்த்தர்களாகிய ஆச்சாரியர்கள் விக்கிரகங்களுக்கு ஜீவப்பிரதிஷ்டையால் கொடுத்த சக்தி எங்கு போயிற்று? கோவில்களிலுள்ள காவலாளிகளுக்கோ, பூஜகர்களுக்கோ, தர்மகர்த்தாக்களுக்கோ, பக்தர்களுக்கோ, போலீஸ்காரர்களுக்கோ, 'திருடர் வருகின்றனர்' என்பதாக முன்னரே ஓர் எச்சரிக்கை செய்திருந்தால் திருடர்கள் புகுந்து பொருள்களைக் கொள்ளையடித்துக் கொண்டுபோக இடமுண்டாகாது. அவ்வாறு எச்சரிக்கை செய்யவில்லை என்றாலும், திருடர்களுடைய கை கால் முதலியவற்றை அசைக்க முடியாமல் ஸ்தம்பிக்கச்செய்தாலும் போதுமானது. திருடர்கள் திருடிக்கொண்டு ஓடுவதற்கு முடியாமல் அவ்விடத்திலேயே ஸ்தம்பித்து நிற்பர். அங்ஙனம் நிற்பதைக்கண்டால், பக்தியில்லாத மகாபாவிகளுக்கும் அந்த திருடர்களுக்கும் மேலான பக்தியுண்டாகி அவர்கள் நல்வழிக்கு வந்திருப்பர். பக்தர்கள் கோவில்களில் அர்ப்பணம் செய்துள்ள பொருள்களும் போகாமல் இருந்திருக்கும். விக்கிரகங்களால் அஃதொன்றையும் செய்யமுடியவில்லை. அல்லது கோவில்களில் சென்று திருடவேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்காமலிருந்தாலும் போதுமானது. விக்கிரகங்களுக்கு அதுவும் முடியவில்லை. இக்காலங்களில் நடக்கும் கதைகளிருக்கட்டும். பண்டைய காலத்தில் திப்பு சுல்தான் அனேக கோவில்களை இடித்து பிம்பங்களை உடைத்து அங்குள்ள திரவியங்களை வாரிக்கொண்டு போகும்போதும் விக்கிரகங்கள் அசைவற்றிருந்ததென்னையோ? விக்கிரகங்களுக்குக் கொஞ்சமாவது சக்தி இருந்திருக்குமாயின் அந்தந்த சந்தர்ப்பங்களில் அவற்றின் சக்தியைக் கொஞ்சமாவது காட்டியிருந்திருக்குமே? ஒரு சக்தியும் அவற்றினிடம் காணப்படவில்லை. அத்தகைய சக்தியற்ற விக்கிரகங்களின் பூசையினாலும், அபிஷேகத்தாலும், ஸ்தோத்திரங்களாலும், விக்கிரகங்களோ விக்கிரகத்தின் மூலமாய் கடவுளோ ரோகங்களை நீக்கி முத்தியைக் கொடுத்தது எனவும்; சந்தான விருத்தியும், சம்பத்தும் கொடுத்தது. எனவும், பிறவும் பற்பல நூல்களெடுத்துக்காட்டி இக்காலத்திலும் பற்பல நூல்களை எழுதியும், மொழிபெயர்த்தும் கோவில்களை கட்டச்செய்தும், வித்வான்கள் மக்களை ஆனந்தத்திற்கு இருப்பிடமான சரீரமாகிய கோவிலிலிருந்து தவறச்செய்து அதோகதி அடையச் செய்கின்றனர். இதற்கோ சொல்லேயில்லை. பகீரதன் கோகர்ணக் கோயிலில் பூசித்தகால் ஆகாச கங்கையை இப்பூவுலகிற்கு வரவழைத்தனன் எனவும், இராவணனுக்கு மூன்று உலகங்களையும் அரசாளும் பதவி கிடைத்ததெனவும் இங்ஙனம் ஒவ்வொரு கோவில்களிலும் பூசித்த ஒவ்வொருவருக்கும் கிடைத்த சித்திகட்கு அளவில்லை எனவும் புராணங்கள் கூறுகின்றன. அவற்றை எடுத்துக்காட்டி தற்போதுள்ள சுவாமியார்களும் ஆச்சாரியர்களும் மற்றும் சிலரும் விக்கிரகாராதனாதி கர்மங்களை விருத்தி செய்கின்றனர். இந்த சுவாமியார்களோ ஆச்சாரியர்களோ அந்த கோவில்களுக்குச் சென்று பூஜை செய்து ராஜ்யாதிபத்யம் முதலிய சித்திகளில் ஏதாவதொன்றைச் சம்பாதிக்கக் கூடாதோ? அவ்வாறு செய்யாததேன்?

ஏ! கருத்தை அறிந்தவர்களே! நன்கு யோசித்துப் பாருங்கள்! அது இருக்கட்டும். அத்தகைய கோவில்களில எவ்வளவோ காலம் பூசித்தும் இக்காலங்களில் யாருக்கும் எத்தகைய சித்தியும் உண்டாவதில்லை. அஃதேன்? சற்று சிந்தித்துப் பாருங்கள்! ஐரோப்பா முதலிய வெளி நாடுகளுக்குச் சென்று அனேக வருடங்கள் கஷ்டப்பட்டு ஆங்கில பாஷையையும், சட்டங்களையும் படித்து, எவ்வளவு கடின பரீக்ஷைகளாலும் அவற்றில ஜெயித்து, இந்துக்கள் இக்காலத்தில் பெரும் வல்லுநர்களாகின்றனர். ஒரு பார்ப்பனனோ, ஒரு சூத்திரனோ, ஒரு தாழ்த்தப்பட்டவனோ, இந்துக்களுள் எவனாவது ஒருவன் கோவில்களில் விக்கிரகங்களை பூசித்தல் முதலிய கர்மங்களால் ஒரு சித்தியையாவது அடைந்து வல்லவனாகாததேன்? அவ்வாறு பூசித்து மேன்மை அடைந்ததாகக் கண்டால் ஞானிகள் விக்கிரகாராதனை முதலிய கர்மங்களை ஒருக்காலும் நிந்தித்திருக்கமாட்டார்களே! குழந்தைப் பருவத்தில் குழந்தைகள் மரப் பொம்மைகளை வைத்துக்

(12-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 20—6—54 [ஞாயிறு

தூரப்படும், தாம்பூலம்!

☆

போதையைக் குழைத்து, விழியின் வழியாகவீசுகிறாள்! புன்சிரிப்பு அடிக்கடி மலர்ந்து, மறைகிறது!!

அழகிதான், அவள். ஆனால்' வீட்டிற்குள்ளே, இருப்பவளல்ல. விதிதான், மார்க்கெட்! விழியசைப்புத்தான் விளம்பரம்!!

பாகுமொழியாள், பலரைப்படுகுழியில் தள்ளும் இவளைப் பாதகியென்பர்—நடமாடும் நாசம், சதிகாரச் சனியன், என்றெல்லாம், ஏசவும் முன் வருவர்.

இத்தகையோரைத் தண்டிக்க சட்டமும், திட்டப்படுகிறது! அனுதினமும், ஆற்றோரத்திலும் வீட்டுத்திண்ணைகளிலும், இந்த விபரீதத்தைத் தடுப்பதுபற்றி—வயோதிகர் மட்டுமின்றி, வாலிபர்கள்கூட விவாதிக்கின்றனர்.

இதே நிலையில் ஆனால் இன்னும் கோரமான வழியில், புன்சிரிப்பாலும், போதை மொழியாலும், வீழ்த்தி, வெற்றிபெற்ற வண்ணம், மகிழ்ந்துலாவும்கூட்டம் இருக்கிறது—நாட்டில். அதன் பக்கம், வயோதிகர்களின் பார்வை செல்லுவதில்லை—வாலிபர்களிலும் பெரும்பாலோர், கவனிப்பதில்லை—சட்டமும் நெருங்குவதில்லை, சர்க்காரும் அஞ்சுகிறது.

உடலைவிற்று உயிர் வாழத் துடிக்கின்றனர், அவர்கள். இவர்களோ, அந்தத் தாசிகளைவிட அதிக தளுக்கும் மினுக்கும் செய்கின்றனர்! பார்வையில், பாகு கலக்கப்பட்ட அன்பைச் சொரிகின்றனர்! பேச்சில், ஆசை வழிந்தோடுகிறது! அத்தனையும், எதற்காக என்று எண்ணிடின் கிடைக்கும் விடையிருக்கிறதே, அது, அச்சத்தையும் திகிலையும் அதிகமாக்குகிறது, நமக்கு.

அதனால்தான், நாடாளவந்த நாயகர்களைப் பார்த்து, நாள்தோறும் எச்சரித்து வருகிறோம்! 'நஞ்சு தடவப்பட்டபழம்—அது. நத்தாதீர், மயங்காதீர். உம்மையும் கொல்லும் நீர் ஆளும் மக்களையும், சாகடிக்கும்' என்று, சுதந்திரம் சூழ்ந்த நாள் முதல் சொல்லி வருகிறோம். அதனைக் கேட்கும்போது, ஆளவந்தார், சாமியின் காலடியே சதமெனக்கிடக்கும் அன்பர்களுக்கு மட்டுமல்ல, தாசிவீடு செல்லும் தறுதலையைக் கண்டு சீறிடும் தயாளசீலர்களாம் பலருக்குக்கூட, கோபம் கொட்டுகிறது, தேள்போல—கூத்தாடுகின்றனர், இந்த தி.மு. கழகத்தினர்! ஏதேதோ சொல்லுகின்றனர்! ஆகாயத்தில், கோட்டை கட்டச் சொல்லுகிறார்கள்! ஆகுமா, இயலுமா — என்றெல்லாம், ஆர்ப்பரிக்கின்றனர்.

அவ்வண்ணம் சீறிடுவோரின் சிந்தனைக்கு, இதோ ஓர் சம்பவம். எழிலும், வளமும் பூத்துக் குலுங்கும் பம்பாய் மாநிலத்தை ஆளும் 'பாக்கியம்' பெற்ற அன்பர் மொரார்ஜி தேசாய் என்பாருக்கு கடந்த 16-ந் தேதி, ஓர் அன்பளிப்பு, தரப்பட்டிருக்கிறது அளித்தவர் முகத்திலும் புன்னகை தவழ்ந்ததாம்! அதைப் பெற்றுக்கொண்டவர் முகத்திலும் அகமகிழ்ச்சி வழிந்ததாம்! அன்பளிப்பு தந்தவரைப் புகழ்ந்து, போற்றி, பாராட்டியிருக்கிறார்—தேசாய்; பொதுமகளிடம், தாம்பூலம் பெற்ற லோலன். சரசமொழிகளைப் பொழிவானே, அதுபோல. அளிக்கப்பட்டது, ஒரு புது கார்! அளித்திருப்பவர் பிர்லா!! இனமாக, சர்க்காரின் முதல்வர் சவாரி செய்வதற்காக, அதை ஒரு விழாபோல் நடத்தி, வழங்கியிருக்கிறார், பிர்லா. வழக்கம்போல், பிரசங்கமும், நடைபெற்றிருக்கிறது.

ஒரு கார் வாங்கக்கூட சக்தியற்றதல்ல, சர்க்கார்—இப்போதே, ஒவ்வொரு மந்திரிமாரும் ஆண்டொன்றுக்கு ஆறாக கார்களில் வலம் வருகின்றனர்—சிலர், அந்தக்கார் சவாரி செய்வதற்காகக்கூட மானத்தை இழந்து 'கனம்'களாகின்றனர்—எனவே, காசில்லாமல், திருவோடு தூக்கும் நிலையில் இல்லை, அரசு. எனினும், மலபார் ஹில்ஸ் மகிபர் பிர்லா, மனமுவந்து, கார் ஒன்றை அளித்திருக்கிறார்! யாருக்கு—மொரார்ஜிதேசாயிக்கு, அல்ல; முதல் அமைச்சருக்கு. அதனையும் திட்டவட்டமாகத் தெரிவிக்கத் தவறவில்லை, பிர்லா, 'கார், சர்க்காருக்குத்' என்பதாக. எனினும், முதலமைச்சர், பல்லைக்காட்டி, கையை நீட்டி, பரிசென மகிழ்ந்து, காரில் அமர்ந்து, கொஞ்சதூரம் சென்று வந்து, 'பலே! பலே! வணக்கம்! ஆனந்தம்!' என்று அகமும், முகமும் மலர, தெரிவித்திருக்கிறார். அதுபோதுமா—அதனால், எதனை எதிர்பார்த்து, பிர்லா அந்தக்காரை அளிக்கவந்தாரோ, அந்த உறுதியையும் வழங்கியிருக்கிறார், "இது போன்ற சுதேசிகளை ஆதரிப்பதே என்னுடைய சர்க்காரின் கடமையென்று"

காரின் விலை, பதினாயிரம் ரூபாய் இருக்கலாம்! ஆனால் மொரார்ஜி தேசாயின் மதிப்பென்ன—கோடானுகோடி மக்களின், குரல். அதனை, ஒரு பதினாயிரத்துக்கு ஏலம், கூறியிருக்கிறார்! 'என்னுடைய சர்க்காரின் கடமை, அதுதான்' என்று. இனி எத்தனையெத்தனை கார்கள், விற்பனையாகுமோ—எவ்வளவு பெரிய விளம்பரம் ஏற்படுமோ கம்பெனிக்கு—என்கிற வெற்றிப் பூரிப்புடன்தான், பிர்லா போயிருப்பார், மாளிகைக்கு! முதலமைச்சரும், காரின் அழகு அதை அளித்த பிர்லாஜின் அன்பு, ஆகியவைகளை எண்ணியபடிதான் அரசாங்க மாளிகைக்குள் நுழைந்திருப்பார்!! ஆனால். அந்தச் செய்தி, நமது இருதயத்துக்குள் நுழையும்போது, என்ன எண்ணுவர் நல்லோர். அதைத்தான், சிந்திக்கலானோம், நாம்.

வனப்பைக் காட்டி, அரசியல் தலைவர்களை வசீகரிக்கும் சாகசம், புதிதாகத் தோன்றியதல்ல—பிர்லா பரம்பரைக்கு. ஆலைகளின் வைரி, பாரிகளின் தோழர், காந்தியடிகளையே வீழ்த்தியிருக்கிறது முன்பு—அவர் தங்கியதும், செத்ததும் கூட பிர்லாவின் மாளிகையில்தான். மாளிகையின் ஆடம்பரம், அங்கே கிடக்கும் சப்ரமஞ்சம், அழகு

யைப் பல கோணங்களில் காட்டிடும் கண்ணாடி, அவைகளுக்காக தான் செலவழித்த தொகை, இந்த ஆடம்பரங்களைக் காட்டி, பொதுமக்கள் தலைவர்களை பல முறை 'சாவு' கொண்டிருக்கிறது, அக்கூட்டம். அதே கட்டம்தான் இன்றும்.

அன்பளிப்பை வழங்கிய பிர்லா, விழாவில் கூடியிருந்தோரிடம் தெரிவித்தாராம், "என் கடன் பணி செய்து கிடப்பதே! எல்லா உயிர்களிலும் மேன்மை பெற்றவன் மனிதன். அவன் தன்னுடைய காரியங்களை, விரைவாகவும், வேகமாகவும் முடிக்கவேண்டும். அதற்கு, கார்கள், அவசியம். அப்படிப்பட்ட கார்களை, இங்கேயே, வேண்டுபவர்களுக்குத் தயாரித்தளிக்க பணி புரிகிறேன்" என்பதாக அவருக்கு இன்பம்தரவே இருக்கிறேன், என்று கூறுவர், கோணல்மதிபடைத்தவர்! ஆனால் பிர்லா, கூறுகிறார்!! — அங்குதான் இருக்கிறது, சூட்சமம்.

*

இந்தச் சூட்சமத்தையே, இந்தியா விடுதலை பெற்றுவிட்டதென எல்லோரும் கூடிக் குதூகலித்த பொழுது, எச்சரித்தோம், இங்குள்ளோரிடம் "விரும்பிய சுதந்திரம், இன்னும் கிடைக்கவில்லை இப்போது, வெள்ளை ஆதிக்கத்திடமிருந்த அரசுச்சாவியை, மஞ்சள் ஆதிக்கம் பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மஞ்சள் ஆதிக்கம், ஓர் சிரிக்கும் சிலந்தி! சாகசத்தால் வலை வீசும் சனியன்!!". என்பதாக. அதனை ஏற்கமறுத்தனர், இங்குள்ள தேசிய நண்பர்கள். இதோ, பிர்லா! இதோ, மொரார்ஜி!!—யாருக்கு சுதந்திரம், என்பதை, நீங்களே கூறுங்கள்.

பாலைவனத்தைச் சோலைவனமாக்க வேண்டும் என்று பண்டிதரும், பிறரும் பேசுகிறார்களல்லவா—அதைவிடப் பல மடங்கு ஆர்வத்துடனும், ஆசையுடனும், இதுபோது பிர்லா பரம்பரையினர், பேசுகின்றனர். அவர்களுக்குச் சொந்தமான ஆலைகளிலே, அனுதினமும், வேலை நிறுத்தப் போராட்டம் நடக்கும்—அதிகக் கூலிகோரி, குமுறுவர், பாட்டாளிகள் — பலருக்கு தினசரி 'சீட்டு' கிழிக்கப் பட்டுக்கொண்டிருக்கும் — அவைகளை அடக்க ஆட்சியின் போலீசை அம்புகளாக்கிக்கொண்டேயிருப்பர் — ஆனால், வெளியில் வந்து விட்டாலோ, அடடா! என்ன கருணை! என்ன தயவு! என்ன தேசபக்தி! என்னென்ன, திட்டங்கள்!!

தேசாய்க்கு கார் வழங்கினாரே பிர்லா; அவர், இந்த விழாவுக்கு, முதல் நாள் பம்பாய் பத்திரிகை நிருபர்களையெல்லாம் அழைத்து அவர்களிடம், நாட்டினிலே, அமைதி சீர்படுத்த வேண்டிய அவசியம், அதற்குதான் வைத்திருக்கும் திட்டம் அத்தனையையும் எடுத்து விளக்கினாராம். அப்போது, அவர் சொற்களில் மட்டுமல்ல, கண்களிலும் கனிவு வழிந்ததாம்,

"இந்திய தேசம், எவ்வளவு க்ஷீண திசையிலிருக்கிறது, தெரியுமா? நாம் எல்லாம் ஏழைகள் நாட்டிலன்றோ இருக்கிறோம்!"

'எத்தனை பேர், வேலையின்றி அலைகிறார்கள் தெரியுமா"

"முப்பதுகோடி பேர் வாழ்கிறோமென்றால், இன்றைய தினம் இருக்கும் தொழிற்சாலைகள் மூலம் 6கோடி பேரையே காப்பாற்றமுடிகிறது"

என்று, மார்க்சியவாதிகூட கூற முடியாத அளவு பாசமும் பற்றும் புள்ளி விபரமும் காட்டி விளக்கியிருக்கிறார். இவ்வளவு விளக்கம் தந்தவர், இந்தத் தீமையைப் போக்கவும் திட்டம் கூறாமலிருப்பாரா!

"ஒரு ஆண்டுக்கு 400 கோடி ரூபாய்க்கு நம்முடைய நாட்டுப் பணம், வெளிநாட்டுக்குப் போகிறது" என்று சஞ்சலப்பட்டிருக்கிறார்! வெளிநாடுகளிலிருந்து அவ்வளவு தொகைக்கு, இந்தியா பொருள்களை இறக்குமதி செய்கிற

பிறப்பு

நமது இயக்கத் தோழரும், திராவிட நாடு விற்பனையாளருமான காஞ்சிபுரம் வே. இராசு அவர்களின் துணைவியார் சரோஜா, 25–5–54ல் பெண் மகவொன்றைக் குத் தாயானார் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். குழந்தைக்கு இன்பவல்லி எனப் பெயரிடப்பட்டது.

சித்தூர் மாவட்டத்தில் அறிவு முழக்கம்

முதன் முதலாக மாநாடுகள்

ஜூலை 10, 11 தேதிகளில்

★ பொதட்டூர்ப் பேட்டையில்! ★

புறப்படத் தயாராவீர், தோழர்கள்!!

தாம்!! இந்த விபரத்தைத் தந்து விட்டு,

"இதில், இன்று, இங்கேயிருக்கிற வசதியைக்கொண்டு ரூ 300 கோடி பொருமானமுள்ள பொருள்களை உற்பத்தி செய்யமுடியும்"

என்று ஆதாரத்துடன் கூறியிருக்கிறார்! இங்கிருக்கிற வசதிகளைக் கொண்டு தயார் செய்ய முடியுமாம் —யார்?—அரசாங்கமே செய்யலாம் எனத் தெரிவிப்பாரா! இவ்வளவு தளுக்கும் எதற்கு? "அரசாங்கம் உதவினால்.........?" என்று கூறியிருக்கிறார். அரசாங்கம் போதிய உதவிகளை அளித்தால், அவ்வளவையும் தயார்செய்ய முடியுமாம்! இவ்வண்ணம் தெரிவிப்பது, அமைச்சரிடமல்ல; பத்திரிகா நிருபர்களிடம் —அவர்கள்தானே, இந்த விபரத்தை மக்களிடம் தருவர்—மக்களும், ஆகா! இந்த பிர்லா, எவ்வளவு நல்லெண்ணத்தோடு கூறுகிறார், அவருக்கு வேண்டிய உதவிகளை அரசாங்கம் செய்துதந்தால் என்ன, என்று கருதுவர். அப்படி கருத்துக்கள் கிளம்பினால், இரட்டிப்பு லாபம் வருமல்லவா!

அதோடு இருந்துவிடவில்லை — அடுத்தபடி அவரையே வணங்க, இங்கேயிருக்கும் வெளிநாட்டு முதலாளிகள் பக்கம் திருப்பியிருக்கிறது.

"முக்கியமான தொழில்களில் பாதி, அன்னியர்வசமே இருக்கிறது. சணல், தேயிலை, நிலக்கரி ரப்பர், டயர், ரசாயனப்பொருள் ஆகியவைகளில் 50 சதவிகிதம் அவர்கள் கையில் சிக்கிக்கிடக்கிறது. பெட்ரோல், முழுதும், வெளிநாட்டாரிடமே இருக்கிறது"

என்றும், ஆயாசப்பட்டிருக்கிறார். நீங்களும் நாமும் இவ்வண்ணம் கூறுவதுவேறு! இப்போது சொல்வது, பிர்லா!! என்ன, பொருள் இதற்கு?

ஆலைகளைத் துவக்க எமக்கு ஆதரவளிக்க வேண்டும்—அன்னியரிடம் இவ்வளவு தொழில்கள் கிடக்கின்றன—இவ்வண்ணம், பிர்லா தெரிவிக்கின்றார்! அதுவும். அரசுக்கு அன்பளிப்பு வழங்கிய வண்ணமே பேசுகின்றார்!! அன்பளிப்பைப் பெற்ற பம்பாய் அமைச்சரும், 'ஆம்! ஆம்! சுதேசிப் பொருள்களை ஆதரிப்பதே எம் சர்க்காரின் கடமை' என்று கூறுகின்றார். இந்தச் சம்பவங்களை, உற்றுநோக்கி, தக்கவிடை பெறக்கோருகிறோம், நமது சுதேசிகளை இவ்வளவு கூறினோமா, பிர்லா—இத்தனைத் தொழில்களையும் சர்க்கார் ஏற்று நடத்தட்டும். அதற்கு என்னாலான உதவியைச் செய்ய வேண்டும்—என்கிற, ஒரு சொல்! வருமா. வாயிலிருந்து!!

கஷ்டம், தெரிகிறது கனிவும் வழிகிறது—வழியும் சொல்லத் தெரிகிறது — அன்னியர் மீதும் கோபம் வருகிறது — [illegible] எதற்காக? [illegible] கூட்டத்துக்காக!!

இத்தகைய 'அருமை மேனி' களுக்கு, காங்கிரஸ் அரசாங்கம் பல்லைக் காட்டுகிறது — [illegible] என்கிறது. பண்டிதரின் டில்லி

★

தேசாயின் தெந்தினைபா... பிர்லாக்கள் குருக்குநாட்ட, படுகுழிப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறது டில்லி.

அதனுடனும் ஒட்டி வாழ வேண்டுமென்கிறனர், நண்பர்கள் அவர்களின் சிந்தைக்கு, வடநாட்டு முதலை, அதே நாளில் மொழிந்த இன்னொன்றையும் குறிப்பிடுகிறோம். கூறினாராம், பிர்லா.

"பம்பாயில், இன்னும், ஏராளமான ஆலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். ஏனெனில் இன்று இந்தியாவின் தொழில் தொட்டில், பம்பாய்தான் அது வளர்ந்தால் தான் நல்லது"

பம்பாய் தொழில் தொட்டிலாம்! அங்கிருந்தே, இந்தியா முழுமைக்கும் பொருள்கள் பரவ வேண்டுமாம்! அதற்கு அரசாங்கம் உதவ வேண்டுமாம்!

அமெரிக்காவின் பொருளாதாரத்தையும் தலைநிதியையும், அங்குள்ள 'நியுயார்க்' நகரமே நிர்ணயிக்கிறது. தெருவெல்லாம்— அவ்வளவு பெரிய பணக்காரர்களும் ஆலைகளும் அங்குதான் உள்ளனவாம்! அதுபோன்று 'நியுயார்க்கை' இந்தியாவிலே ஏற்படுத்த விரும்புகிறார், பிர்லா! அதற்காக என்னென்னவோ, கூறுகிறார், சாகசம், அன்பு, சுவை, எல்லாம் கலந்த [illegible]

அதற்கு, பம்பாய் முதல்வரும் பல்லைக் காட்டுகிறார் — சுதேசி செழிக்கச் செய்வதே, என் கடமை —என்கிறார்.

சரி! தேசாய்க்கும் பிர்லாவுக்கும், பம்பாய்ச் சரக்கு சுதேசிதான்! நமக்கு!!—மஞ்சள் [illegible], எத்தகைய [illegible] நிலை இருக்கிறது, அதற்கு எந்தளவில் துணைபோகின்றனர் அவர்களின் அமைச்சர்கள், எண்ணிப் பாருங்கள்! உள்ளம், தெளிவுறும்!! தாசி [illegible]ரும் தாம் மூலம், எதற்கு என்பதும் விளங்கும்!!

★

பிறப்பு

மேட்டுப்பாளையம் தி. மு. க. தோழர் க. இராமனின் துணைவியார் இராசலெட்சுமிக்கு 22-5-54ல் ஓர் ஆண்குழந்தை பிறந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தித்திக்கும் 'சோலை'யில் ஒரு 'தேன் கூடு!'
எத்திக்கும் புகழ்பரப்ப, ஓர் ஏடு!!

★ தென்றல் ★

ஆசிரியர்: கண்ணதாசன்

ஜூன் 22-முதல் திராவிடமெங்கும் உலவும்!

தனிப்பிரதி 0—2—0

'தென்றல்' அலுவலகம்: ராயப்பேட்டை, சென்னை.

[கண்டதும் கேட்டதும்]

தெள்ளத் தெரிந்தது

[முகவை. பாண்டியன்]

"மனிதர்கள் உலகத்தில் வாழப் பிறந்தவர்கள் என்று சொல்கிறார்களே! எங்களுக்கு எங்கே அந்த வாழ்வு? நாங்களும் மனிதர்கள்தானே! எங்களுக்கு வாழ்வென்ற பெயரில் தரப்பட்டிருப்பதெல்லாம் என்ன?

தொட்டுத் தாலிகட்டிய மனைவிக்கு கட்டிக்கொள்ள ஒரு கண்டாங்கிச் சேலை வாங்கித்தர இயலாததால் இதயம் கொதித்து எழும்புப் பெருமூச்சு! அந்தப் பெண்சாதி எனக்குப் பெற்றுத்தந்த செல்வச்சிறார்களின் சிறிய சில ஆசைகளையும் நிறைவேற்றவும் கையில காசின்றிக் கலங்கும் கண்கள் பொங்கிப்பொழியும் கண்ணீர், இவைதானே எங்கள் வாழ்வில் தினம் தினம் நாங்கள் பெற்றிருப்பது? இவைதானே—இந்தத் துன்பச்சின்னங்கள்தானே எங்களுக்குச் சுவைக்கத் தரப்பட்டிருப்பவை? இதுதான் வாழ்வா? இதைத்தான் உலகம் வாழ்வென்கிறதா?

'இல்லை! நிச்சயமாக இல்லை'

இல்லை என்றால் எங்கே எங்களுக்கு வாழ்வு? ஏன் எங்கட்கு அந்தவாழ்வு தரப்படவில்லை? எங்கள் வாழ்வை எங்கட்குத் தராது தட்டிப் பறித்துவைத்திருக்கும் தூர்க்கர் யார்?

நாங்கள் வாழ்வென்ற பெயரிலே கேட்பதெல்லாம் என்ன?

உண்ணுவதற்கு, பாலும் தெளிதேனும், பாகும் பாதாம்பருப்பும், பாயசமும் பன்னீர் ரசவடையும் கேட்கிறோமா? இவற்றை நாங்கள் கண்டதுகூட இல்லை. கேட்டுத்தானே அறிவோம்!

உடுப்பதற்கு, உல்லனிலே ஒரு 'செட்' உயர்ரக பட்டாடையிலே பத்துவகை, உறங்கும்போது உடுத்த என்று மற்றொருவகை, இப்படிப் பலவகை உடுப்பா கேட்கிறோம்?

இல்லையே! உடல் உயிரோடு உலவ, உழைக்கத் தேவையான கூழ் உணவும், மானம் காக்க உடுப்பதற்கு நான்குமுழம் அணியும் உழைத்த அலுப்புத்தீர ஓய்வுபெற உறங்குவதற்கு இடைஞ்சலில்லாக் குடிலும்தானே — நாங்கள் கேட்பதெல்லாம்.

இவை கூட, இந்த இன்றியமையாதனகூடக் கிடைக்காது, வாழ்கிறோம் என்ற பெயரிலே, வறுமையால் வாடிவதங்கி, அணுவணுவாய், அங்குலம்அங்குலமாய்ச்சாவதற்குப் பெயர்தானா எங்களுக்குத்தரப்படும் வாழ்வா? அங்ஙனிலே எத்தனைபேர் சாவையே மருந்தென உண்டு 'சாந்தி' பெற்றிருக்கிறார்கள்?

பசியால் பத்தும் பறந்துபோக, இல்லறந்துறந்து, வாழ்வின் கடைக்கோடிக்கு வறுமையால் துரத்தப்பட்டு சாவின் வாயிற்படியிலே நின்றுகொண்டு வாழ்வுவாழ்வு என ஓலமிடுவோரின் எண்ணிக்கை எத்தனை தெரியுமா?"

இப்படியெல்லாம் கேட்கவில்லை அங்கே ஆயிரம் ஆயிரமாக ஆர்வத்தோடு கூடியிருந்தவர்கள்.

எங்கே கூடியிருந்தனர்? யார்கூடியிருந்தனர்? எனக்கேட்கிறீர்களா?

சென்னையை அடுத்து கொடுங்கையூர் எனும் கிராமம் ஒன்றிருக்கிறது. அந்தக் கிராமத்திற்குப் போகும் வழி நெல்லூர் பெரிய சாலையை ஒட்டித்து உள்ளது. அந்தப் பாதை எப்படிப்பட்டது தெரியுமா? பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல அது ஒரு 'மோட்சலோகப் பாதை'— மேடும் பள்ளமும், கல்லும் கரம்பையும், நிறைந்தது.

அந்தக் கிராமத்திலே அத்தனை ஆயிரம்பேர் கூடியது, தி. மு. க. பொதுச் செயலாளரைச் சந்திக்க— பொதுக் கூட்டத்தில்தான்.

கொடுங்கையூர் கிராம தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில் கூடியிருந்தவர்கள் எல்லாம் பல்கலை பயிலும் பள்ளி மாணவரோ, அன்றி படித்து பட்டம் பெற்று பணம் ஈட்ட, பதவிவகிப்பவரோ, அல்லது தான்உழைக்காது, உடல் வாடாது பிறர் உழைப்பில் உல்லாச வாழ்வு நடத்தும் உலுத்தரோ. அன்றி, ஒரு நல்ல பொழுதுபோக்குப் பொதுக் கூட்டம் என்றெண்ணிடும் பொல்லாத உள்ளங்கொண்ட பணக்காரரோ அல்லர். மாறாக, சிலர் நம்மைச் சொல்கிறார்களே — இவர்கள் எல்லாம் படித்தவரைப் பார்ப்பர் – பகட்டாகப் பேசுவர், பார்ப்பனரைத் திட்டுவர் அவ்வளவுதான்! பாட்டாளியை, உழவரை, தொழிலாளியைப் பற்றிப் பேசார்' என்று பொய்யும் புனைசுருட்டும் சொல்கிறார்களல்லவா? அவர்களுக்கெல்லாம் தெள்ளத் தெரியும் வகையில் நாம் அன்று சந்தித்தது யாரைத் தெரியுமா?

உதிரம் சுண்ட உடல் தேய உழைத்து, உழைப்பின் பலன்யாவும், பலரால் பலவழியால் சுரண்டப்பட்டுப்போய் உயிர்ப்பிணமாய் உலவும் அவல நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் பரிதாபத்திற்குரியவர்கள். ஏன் பிறந்தோம்? என ஏங்கித் தவிப்பவர்கள். வாழ்வுதேடி அலைபவர்கள், உழவர் பெருமக்கள். காண்பதெல்லாம் — காலில் அணியும் செருப்பு முதல் காலருக்கு அணியும் பொத்தான் வரை— இன்றைய உலகின் அன்றாட வாழ்வுக்கு அத்தியாவசியமான பொருள்கள் அத்தனையையும் உற்பத்தி செய்து தருகிறானே— இயந்திரம் இயக்கும் சக்தியோடு இணையில்லா தன் உழைப்பை இணைத்து விட்டிருக்கிறானே— அந்தத் தொழிலாளி, அவர்கள்.

பட்டப் பகலில் பன்னிரண்டு மணி வெயில் எனவும் பாராது பார வண்டியை மாடென மனிதர் இருவர் முன்னிருந்து இழுக்க, பின்னிருந்து இருவர் முட்ட—பாதரட்சை இல்லாப் பாதசாரிகளின் பாதங்களை பகலவனின் வெப்பம் பதம்பார்க்காமலிருக்கட்டும் என்ற கருணையாலோ என்னவோ தன் உடம்பிலிருந்து ஊற்றென ஒழுகும் வியர்வை சிந்த பாடுபடுகிறானே பாட்டாளி— இவர்கள் எல்லாம்தான் கூடியிருந்தனர், தி. மு. கழகக் கூட்டத்தில்.

"வாழ்வில்லை நமக்கு; வாழ்வின் இன்பத்தை அதன் எல்லையை எட்டிப்பிடித்துள்ளனர் இந்த நாட்டிலே ஒரு சிலர். ஏன் இந்த ஏற்றத்தாழ்வு? நாட்டின் ஒரு பகுதியிலே ஆனந்தம் தாண்டவமாட இன்னொரு பகுதியிலே அல்லல் ஆட்டிப் படைப்பானேன்? ஒரு பகுதியிலே மிகுவாழ்வும் ஒரு பகுதியிலே மிகு தடுமாற்றமும் இருக்கக் காரணம் என்ன?

'இந்த நாடு ஏழை நாடா? பணக்கார நாடா? இந்த நாட்டிலே என்ன இல்லை, நாம் வாழாமல் வாடுவதற்கு?'

இப்படிக் கேட்டார் பொதுச் செயலாளர். இந்த நாட்டுச் செல்வங்களை அளவிட்டுக் காட்டி வேறு பல நாடுகள் எல்லாம் ஏதாவது ஒவ்வொரு செல்வத்தைப் பெற்றிருந்தால் நாம் கேட்கும் திராவிட நாட்டில் எல்லாச் செல்வங்களையும் பெற்றிருக்கிறோம் என்பதையும் நாம் அத்தனை அதிகமான செல்வங்களைப் பெற்றிருந்தும் நமக்கு வாழ்வு கிடைக்காதது ஏன்? என்பதையும் நம் மக்கள் இன்னமும் நமக்கு வாழ்வு ஏன் கிடைக்கவில்லை என்பதற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ளாமலிருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக் காட்டி அவர்களை வாழாது தடுக்கும்—வாழ்வைத் தராது அவர்களை வாட்டிவதைக்கும் தீய சக்திகளைப் படம் பிடித்துக் காட்டி விளக்கினார்.

ஏற்கனவே அண்ணா அவர்கள் எடுத்துக் காட்டியவற்றை நீங்கள் 'நம்நாடு' இதழில் படித்திருப்பீர்களே! 'மாஸ்கோமணம்வர' 'மோட்சலோகப் பாதை' இப்படித் தலைப்பிட்டுத் தந்திருந்தோமே!

மக்கள் முதலில் சிந்திக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். நம்மை வாழாது ஆண்டவன் செய்துவிட்டான் — இட்டமுடன் இன்னபடி என்று எழுதிவிட்டானே அந்த எழுத்தை அழிக்க யாரேவல்லார் எல்லாம் விதி. நாம் இப்படித்தான் கஷ்டப்படவேண்டும் என்று ஆண்டவன் விருப்பம்போலும், எல்லாம் ஊழ்வினைப்படி நடக்கிறது" என்று மக்கள் இன்னமும் நம்பிக்கொண்டிருப்பதைச் சொல்லி, அவர்கள் கொண்டுள்ள அத்தகு மூடப்பழக்க வழக்கங்களும், எண்ணங்களும் அவர்கள் உள்ளத்தைவிட்டு அகற்றப்படவேண்டும் என்பதற்கான சான்றுகளையும் காட்டி, அந்த மக்களுக்கு — விவசாய தொழிலாளர், பாட்டாளி பாமர மக்களுக்கு, விழிப்புணர்வைத் தந்தார் பொதுச் செயலாளர். "திராவிடநாடு, திராவிடர்க்காக வேண்டுமென்பதில், உங்களுக்குத்தான் அதிக அக்கறை இருக்கவேண்டும்" என்று பொதுச் செயலாளர் ஆதாரங்களோடு குறிப்பிட்டபோது அந்த மக்கள் எழுப்பிய ஆரவாரப் பேரொலி, அவர்கள் ஆதரவு தி. மு. கழகத்திற்கு என்றென்றைக்கும் உண்டு. என்பதைக் காட்டிற்று. திராவிடநாடு திராவிடர்க்காக்கப்படுவதற்காக, எல்லார், எல்லார்க்கும் கிடைப்பதற்காக, நம்மை நாமே ஆண்டுகொள்கிறோம் எனும் மானத்தோடு உலவுவதற்காக திராவிட நாட்டை வடவர் பிடியிலிருந்து விடுவிக்க தி. மு. கழகம் நடத்தும் போராட்டங்களில் நாங்கள் பெரும்பங்கேற்று வெற்றி பெறுவோம் என்பது தெள்ளத் தெரிந்தது — அவர்கள் எழுப்பிய உணர்வு பூர்வமான ஆரவாரப் பேரொலியின்மூலம். ✕

7-ம் பக்கத் தொடர்ச்சி

பொ[illegible] என்னென்ன விளையாட்டுகள் விளையாடுகின்றன! அந்த பொம்மையைக் குளிப்பாட்டுகின்றன. ஆபரண அலங்காரங்கள் செய்கின்றன, சில உணவுப்பொருள்களை வைத்து "சாப்பாடு சாப்பாடு" என்று கூறுகின்றன — அதனிடம் கொஞ்சிக்குலாவுகின்றன. அதைத் தொட்டிலில் போட்டு ஆட்டி பாட்டுப்பாடி குழந்தாய் "தூங்கு தூங்கு" என்று கூறுகின்றன. அதேமாதிரி கர்மிகள் விக்கிரகங்களை உண்டாக்கி அபிஷேகம் செய்கின்றனர், வஸ்திரங்களால் அலங்கரிக்கின்றனர், பற்பல உணவுப் பொருள்களை வைத்தும் பூசிக்கின்றனர். "பூஜாம் க்ரஹாண, பூஜாம் க்ரஹாண" என பிரார்த்திக்கின்றனர், தேர் முதலிய வாகனங்களில் வைத்து ஊர்வலம் வருகின்றனர். இவர்கள் இவ்வாறு செய்வதை ஆக்ஷேபிக்க ஞானிகட்கு உரிமையில்லையே? சக்தியுள்ள மனிதன், சக்தியில்லாத விக்கிரகத்தைக் கொண்டாடி, அதனால் இம்மை மறுமையின் பங்களைச் சாதிக்கலாமென்று நினைத்து அநேக பொருள்களைச் செலவுசெய்து சரீர துன்பத்தை உண்டாக்கி அறியாமை, தூக்கம் முதலியவற்றால் அழிந்து போவதைப் பார்த்துக் கொண்டிருத்தல் ஞானிகளின் தர்மமன்று. கர்மிகளுக்கு ஞானம் உண்டாவதற்காக விக்கிரகாராதனை முதலிய கர்மங்களைக் கண்டித்தல் அவசியமாகிறது.

சற்குருவை யறியாம
    லுலகத்திலே தான்
சண்டாளர்
    கல்லுகளைத் தெய்வமென்று
பொய்க்குருக்கள் சொன்ன புத்தி
    தன்னைக்கேட்டு
பூசை செய்து
    கல்லுக்களைப் போற்றி செய்வார்.
பொய்க்குருக்கள்
    தங்களுடைய சேதிகேட்டால்
சொர்க்கமுண்டோ
    நகரமெல்லாம் சொல்லும்போது
சற்குருவையறிந்தவனுக்
    குடனே மோக்ஷம்
சார்வதென்றே
    முன்னோர்கள் சாற்றினரே.

★

நாட்டின் நாயகர்கள்

(சிறிய சீரிய அரசியல் ஏடு)

சி. என். அண்ணாதுரை தீட்டியது

காங்கிரசாட்சியின் போக்கை விளக்கிடும் கருத்தேடு

வேலூரில் ஜூன் 26, 27-ல் நடைபெறும் வடார்க்காடு மாவட்ட மாநாட்டிலே கிடைக்கும்.

6. பெரியஇடமென்றால்...!

இரண்டாண்டுகளுக்கு முன், காலேஜில் மாணவிகள் முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கவேண்டிய பூர்வாங்க வேலைகளைச் செய்தவள்தான் நல்லமுத்து.

கல்லூரியில் வேலைபார்த்த மேரி மாசிலாமணி என்ற ஆசிரியைதான் நல்லமுத்துவை அழைத்துக் கொண்டுவந்து இரகசியமாகப் பல மாணவிகளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள்.

பொதுவாக எந்தவித அரசியல் கொள்கைகளிலும் பற்றில்லாத, ஏன் அக்கறையே இல்லாத புஷ்பா இந்தக் கழகத்தில் சிக்கியது ஆச்சரியம்தான்.

நல்லமுத்துவின் யோசனையின் பேரில் இரகசியமாக ஆரம்பிக்கப்பட்ட மாணவிகள் கழகம் வெகு சீக்கிரத்தில் பலமுள்ளதாகி ஹாஸ்டல் மாணவிகள் அவ்வளவு பேரும் அதில் அங்கத்தினராகும் அளவுக்கு வளர்ந்துவிட்டது.

அவ்வப்போது சீர்திருத்தப் பிரசாரம் செய்வதை மாத்திரம் திட்டமாக வைத்திருந்த மாணவிகள் கழகம் சீக்கிரத்தில் சில பிரச்னைகளையும் கையாளவேண்டியிருந்தது!

ஹாஸ்டலில் திடீரென்று சாப்பாட்டுக் கட்டணங்களை அதிகப்படுத்தினார்கள் நிர்வாகிகள்.

"இப்பொழுது விற்கிற விலைவாசியில் இந்தளவு உயர்த்தினால்கூட போதாது!" என்றனர் நிர்வாகிகள்.

"ஐயோ, இவ்வளவு பணமா? இரட்டிப்பு விகிதமா?" என்று வாதாடினர் வறுமையால் பாதிக்கப்பட்ட குடும்பத்திலிருந்து வந்த மாணவிகள்.

மாணவிகள் கழகம் இந்தப் பிரச்னையை விவாதித்தது. கழகத்தின் பின்னால் இருந்து நடத்திய நல்லமுத்துவின் முடிவுக்கு விடப்பட்டது, இந்தப் பிரச்னை.

தற்காலிகமாகச் சில நாட்களுக்காவது ஸ்ட்ரைக் செய்தால்தான் ஹாஸ்டல் நிர்வாகிகளை வழிக்குக் கொண்டுவரமுடியும் என்று திட்டவட்டமாகத் தெரிந்தது!

ஸ்ட்ரைக் என்றவுடனே "ஓ, நாங்கள் தயார்!" என்று துள்ளிக் குதித்தனர் மாணவிகள்.

சட்டக் கல்லூரியைவிட்டு அப்பொழுதுதான் வெளிவந்து அரசியலில் பங்கெடுத்துக்கொண்ட நல்லமுத்துவுக்கும் ஸ்ட்ரைக் நடத்துவதிலே ஒரு தனி ஆனந்தமே இருந்தது.

மறுநாளே மாணவிகள் ஹாஸ்டலில் சாப்பிடப் போகவில்லை.

"ஹாஸ்டலைக் கட்டுறவு முறையிலே நடத்து!"

"அநிதக்கட்டணம், அநியாயம்!"

"ஏழைகளை ஏமாற்றுகிறான், எத்திப்பிழைக்கும் மானேஜர்!"

"ஒழிக போலி நிர்வாகிகள்— வாழ்க மாணவிகள் நிர்வாகக் குழு!" என்றெல்லாம் கோஷங்கள் கிளம்பின!

முதலில் ஒரு வாரம் உற்சாகமாக ஸ்ட்ரைக் நடந்தது.

ஹாஸ்டலுக்குப் பக்கத்திலிருந்த ஆனந்தபவன் ஹோட்டலுக்கு ஓரே லாபம்! அதுதான் மிச்சம். ஹாஸ்டல் நிர்வாகிகள் அசைந்து கொடுப்பதாயில்லை.

இரண்டாவது வாரத்திலே மாணவிகள் பையில் பணமில்லை...! வெறும் பவுடர் பெட்டிதானிருந்தது! நல்லமுத்துவிற்கு இதுவரை அனுபவிக்காத புதியபிரச்சனைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது.

மாணவிகள்—அதுவும் காலேஜ் மாணவிகள்—தங்கள் வீண் பழக்கங்களில் எதையும் குறைத்துக் கொள்ளத் தயாராயில்லை. அவசியத்தைக் கூட உணர மறுத்தார்கள்.

நல்லமுத்துவுக்குத், தான் ஆரம்பித்த முதல் ஸ்ட்ரைக்கை தோல்வியாக முடிப்பது பெரிய மனவேதனையாக இருந்தது.

அரசியலில் ஆர்வங்காட்டிய சில பெண்களைக் கூட்டிவைத்துக் கொண்டு யோசனை பண்ணினான்.

எல்லோருக்கும் அப்பொழுது இருந்த சிக்கல் நன்றாகத் தெரிந்தது. ஆம்—பணம்! இதுதான் தேவை. இரண்டாயிரம் ரூபாயாவது இருந்தால் இன்னும் இரண்டு வாரத்திற்கு ஸ்ட்ரைக் நடத்திவிடலாம். அதற்குள் சட்டமாய் நிர்வாகிகளை வழிக்குக் கொண்டுவந்து விடலாம். நிச்சயம் எடுத்துக்கொண்ட காரியம் வெற்றி பெறும்.

ஆனால் பணத்திற்கு எங்கே போவது? நல்லமுத்து, அரசியல் குட்டையிலே விழுந்தபின் எந்தத் தொழில்கூடச் செய்ய முடியாமல் அலைந்து வாழ்க்கையை அணைத்து வாழும் அபாக்கியவனாகிவிட்டான். அவனெங்கே செல்வான், இரண்டாயிரம் ரூபாய்க்கு?

இந்தப் பிரச்சனைக்கு முடிவுகாண முடியாமல் நல்லமுத்து தவித்துக் கொண்டிருக்கும்போதுதான் புஷ்பாவை அழைத்துக்கொண்டுவந்தார்கள் இரு மாணவிகள்! அன்றைய தினம் முழு நிலா. கடற்கரையிலே லேசாகக் குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தது.

“சார்! இவள் எங்கூட இண்டர் படிக்கிறாள். பெயர் புஷ்பா!”

“அப்படியா! மிகவும் மகிழ்ச்சி!” என்று கூறி வழக்கமான கும்பிடு போட்டான், நல்லமுத்து.

“மேரி டீச்சர்தான் உங்களிடம் என்னை அனுப்பிவைத்தார்கள்!” என்றாள் புஷ்பா.

“மேரியம்மாவா...? முக்கியமான செய்தி ஏதாவது சொன்னார்களா?”

“செய்தி என்ன. ஸ்ட்ரைக்கைப் பற்றிதான். இப்படி மாணவிகள் எல்லாம் ஏன் தொந்திரவில்மாட்டிக் கொண்டார்கள் என்று அவர்களைக் கேட்டேன். அவர்கள்தான் உங்களைப் பார்க்கச் சொன்னார்கள்!”

நல்லமுத்துவுக்கு ஒன்றுமே புரியவில்லை. அழைத்துவந்த பெண்ணைப் பார்த்தான்.

“இவளும் ஹாஸ்டலில் இருப்பவளா? என்றான்.

அவள் துள்ளிக் குதித்தாள். “இல்லை, சார். “உத்தமநாதர்டெக்ஸ் டைல்ஸ்” சொந்தக்காரர் உத்தமநாதபிள்ளை மகள் சார்!” என்றாள்.

இந்தப் பதிலைக் கேட்டதும் நல்லமுத்துவுக்கு முகமே மாறியது. அந்த நேரத்திலே வானத்திலிருந்து ஒளியை வீசிக்கொண்டிருந்த நிலா மேகத்தினிடையே சென்றிராவிட்டால், அவன் முகமாற்றம், புஷ்பாவை அந்த இடத்தையே விட்டு எழுந்து போகச் செய்திருக்கும்.

“இப்பொழுதே ஒரு வாரமாயிடுத்தே, சார் இனி என்னசெய்யப் போகிறீர்கள்! நண்பர்கள் எல்லோரும் ஒரு மாதத்துப் பணத்தை இப்பொழுதே செலவு செய்துவிட்டார்கள்!” என்றாள் புஷ்பா. நல்லமுத்து பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

சில நிமிடங்கள் யாருமே பேசவில்லை.

“என்னமோ, பார்க்கலாம்!” என்று கூறிவிட்டுத் திடீரென்று எழுந்தான் நல்லமுத்து.

எல்லாப் பெண்களும் எழுந்தனர். மணலைத்தாண்டி ரோடுக்கு வந்தனர்.

‘நாங்கள் போய் வருகிறோம், சார் நாளைக்கு ஒருநாள் தான் தாங்கும்!” என்று கூறிவிட்டு அவர்கள் ஹாஸ்டலில் நுழைந்தனர்.

“நாளை மாலை இதே இடத்தில் பாருங்கள். முடிவு சொல்லுகிறேன்!” என்றான் நல்லமுத்து.

“சரி. சார்!” என்று ஒருமித்துக் கூறினர் ஸ்ட்ரைக் கமிட்டிப் பெண்கள்.

அவர்கள் போன பிறகு திரும்பிப் பார்த்தான், நல்லமுத்து. அவன் பின்னாலேயே நின்றுகொண்டிருந்தாள் புஷ்பா! இதுவரை அந்த ஆடவனையும் ஒரு பொருட்டாக மதித்துப் பார்த்திராத புஷ்பா அன்று நல்லமுத்துவை அப்படியே விழுங்கி விடுவதுபோல் பார்த்தாள்.

எலெக்ட்ரிக் விளக்கின் ஒளியில் புஷ்பாவின் காதணிகள் ஜொலித்தன.

நல்லமுத்துவுக்கும் அவளுடைய குழந்தைமுகம் இருதயத்தைப் பிளந்து அங்கே சென்று இரத்தக் குழாய்கள் வழியாகவெளியேறுவது போலதோன்றியது.

“நீங்கள்...” என்றான், ஆரம்பத்தில் அவளை நடத்தியதற்கும் இப்பொழுதுபேசியதற்கும் தலைகீழான வித்தியாசமிருக்கிறது.

கொடுங்கோன்மை முதலாளி, தொழிலாளியின் இரத்தத்தை உறுஞ்சும் ஆலைக்காரன் அந்த உத்தமநாதபிள்ளையின் மகளை ஏறிட்டும் பார்ப்பதா என்ற ஆத்திரம் வந்தது. சட்டென்று திரும்பி அவள் பதிலைக்கூட எதிர்பார்க்காமல் ஓடி நகர்ந்தான்.

“எங்கே போகிறீர்கள். இதோ கார் இருக்கிறது. வாருங்கள் கொண்டுபோய் விடுகிறேன்!” என்றாள் புஷ்பா, தட்டுத் தடுமாறிய வார்த்தைகளில்.

நல்லமுத்து திரும்பினான். அவளோடு பேசுவது பாபம்—தொழிலாளிகளுக்குத் துரோகம் என்று எண்ணினான். ஆனால் அவள் முகத்தைப் பார்த்ததும் அவன் எண்ணங்கள் உடைந்தன.

மனிதாபிமானத்திற்காவது அவளோடு சாதாரணமாகப் பேசி அனுப்பவேண்டியது கடமை என்று தோன்றியது.

“பரவாயில்லை நான் நடந்தே போய்விடுகிறேன்!” என்றான்.

அவளோ விடுவதாயில்லை. “ஏன் நடந்துபோவது — கார் இருக்கும் போது! வாங்க, போகலாம்!” என்று கூறிக்கொண்டே முன்னால் நடந்துவிட்டாள் நல்லமுத்து பின்னால் செல்வது தவிர வேறு வழியில்லை.

காரிலே போகும்போது மறுபடியும் பேச ஆரம்பித்தாள் புஷ்பா. நல்லமுத்துவால் பேச முடியவில்லை.

தான் செல்லக்கூடாத குகைக்கு தன்னை அவள் இழுத்து போவதாகவே எண்ணினான்

“ஏன் இப்படி யோசனைசெய்து கொண்டே இருக்கிறீர்கள். மேரியம்மா இப்பொழுது இருக்கும் நிலைமை பூராவும் என்னிடம் கூறினார்கள்!” என்று கூறிவிட்டு பேச்சு ஓரத்திலே நிறுத்தினான்.

நல்லமுத்துக்கு இந்தச் செய்தி இன்னும் திகைப்பைக்கொடுத்தது.

இப்படிப்பட்ட ஆதிக்கக்காரனின் மகளிடம் நம் விஷயங்களை ஏன் மேரி கூறினார்கள் (?) என்று எண்ணிய வண்ணமே அவளைப்பார்த்து “என்ன கூறினார்கள்?” என்றான்.

அவளோ சிரித்துக்கொண்டே “இதோ இந்த பையை உங்களிடம் கொடுக்கச் சொன்னார்கள்” என்று கூறிவிட்டு தன் கைப்பையை அவனிடம் கொடுத்தாள்.

ஒன்றும் விளங்காத நிலையில் பையை வாங்கி பிரித்தான் நல்லமுத்து.

அதிலே பவுடர், சீப்பு, கண்ணாடி எதுவுமில்லை! இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகளிருந்தன!

அப்படியே அவளைப்பார்த்து, விழித்தான் நல்லமுத்து.

“தன் பெயரை வெளியிட விரும்பாத ஒரு பெண் கொடுத்தாள்!” என்று கூறி இந்தப் பணத்தைக் கொண்டு ஆரம்பித்த வேலையை முடியுங்கள்” என்றாள் புஷ்பா.

நல்லமுத்துவுக்கு நடப்பது கனவா, நினைவா என்று புரியவில்லை.

"உங்களுக்கு மாணவிகள் உலகமே கடமைப் பட்டிருக்கிறது...!" என்று கூறிக்கொண்டு அவள் கையைப் பிடித்துக் குலுக்கினான்— அவளோ சாந்தமாக "இப்பொழுதாவது இந்தப் புஷ்பாவும் ஒரு பெண்தான் என்று ஒத்துக்கொண்டீர்களே!" என்று கூறிவிட்டுக் குறும்புப் புன்னகை புரிந்தாள்.

அதற்குப்பின் பலதடவைகள் நல்லமுத்துவை சந்தித்தாள், புஷ்பா.

அவளுடைய குழந்தை முகத்தைக் காணும்போது பரவசமடைந்தான் நல்லமுத்து.

அவளைவிட்டுப் பிரிந்தபின் அவன் தன்னைத்தானே கோபித்துக்கொண்டான்.

"இவள் வேறுவர்க்கம்—நான் வேறுவர்க்கம்!' இந்தப் பெரும் மனப் போராட்டத்திலே அவன் தவிப்பது புஷ்பாவிற்கு நன்கு தெரிந்தது. ஆகவே அதற்கேற்ற விதமாகவே அவள் நடந்து கொண்டாள்.

இதற்கிடையிலே மாணவிகள் முன்னேற்றக் கழகத்தில் வெற்றியடைந்து "உத்தமநாதர் டெக்ஸ்டைல்ஸ்" தொழிலாளிகள் சங்கத்திற்கே தலைவனானான் நல்லமுத்து.

பகலிலே உத்தமநாதரின் கொடுங்கோன்மையை எதிர்த்துப் போராட்டம். மாலையிலே அந்தக் கொடுங்கோலனின் பூங்கொடியோடு இன்பப்பொழுதுப் போக்கு— இல்லை! உழைத்த அலுப்புத் தீர ஓய்வு நேர விளையாட்டு!

இந்த நாடகக் காட்சிகள் புஷ்பாவின் மனதில் மாறிமாறி வந்து கொண்டிருந்தன.

*

கார் பாக்யவனம் நோக்கிவந்து கொண்டிருந்தது.

ஆறுமுகத்தின் எண்ணமும் வேறுதிக்கில் சிந்தித்துக்கொண்டிருந்தது.

நல்லமுத்துவின் அன்பும் புஷ்பாவின் கனிவும் அவனுக்குப் புதிய அநுபவம், அவனை மதித்துப் பேசிய பெரிய மனிதர்களே நல்லமுத்துவும், புஷ்பாவும்தான். இந்த எண்ணம் அவன் மனதிலே பதியும் முன்னரேயே நல்லமுத்துவும் புஷ்பாவும் இனிமையாகப் பேசிக்கொண்ட காட்சி அவன் கண்முன் தோன்றின.

சேச்சே! எவ்வளவு தப்பாக அவர்களைப்பற்றி அவன் கணக்குப் போட்டுவிட்டான். அவர்களிருவரும் கொண்டிருக்கும் கள்ளக் காதலை மறைத்து வைக்கத் தன்னை ஒரு திரையாக்கிக் கொண்டிருக்கின்றனர் புஷ்பாவும் அவள் காதலனும்! இதையறியாமல் அவர்கள் நல்லவர்கள் என்று எவ்வளவு தவறாக இதுவரை எண்ணிக் கொண்டிருந்தான்.

பெரிய இடமென்றால் இப்படித் தானிருக்கும்!

காசை இறைத்து இன்பத்தை வாரி அணைத்துக் கொள்கின்றனர் பணம் படைத்தோர்.

"எது எப்படி இருந்தால் என்ன? நாம் டிரைவர்தானே! நமக்கேன் இந்த விசாரப்?" என்ற எண்ணங்களே ஆறுமுகத்தின் மனதில் இருந்தது, பாக்யபவனத்தினுள்ளே நுழையும்போது.

"ஆறுமுகம்...!" என்று புஷ்பா கூப்பிடுவது கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

"இரவு, கார் ஷெட்டை சும்மா சாத்தி வைத்திட்டுப் போ... என்ன...?" என்று குறுநகையோடு கூறினாள் அவள்.

"சரி, அம்மா!" என்று சுருக்கமாக பதில் கூறிவிட்டுக் காரைக் கொண்டுபோய் பங்களாவின் முன் வாயிலில் நிறுத்தினான்.

"மறந்துவிடாதே, ஆறுமுகம்!" என்று மறுபடியும் கூறிவிட்டு இறங்கிப் போனாள் புஷ்பா.

ஆறுமுகம் பேசாமல் தலையை ஆட்டிவிட்டுக் காரிலிருந்து இறங்கி பழையபடி வராந்தாவின் தூணில் சாய்ந்துகொண்டு இருந்தான்.

நாலுமணி ஆனதற்கு அடையாளமாக ஹாலிலிருந்த கடிகாரம் டிங்— டாங் என்று அடித்தது. காலை பதினொரு மணியிலிருந்து நாலுமணி வரை புஷ்பா அம்மாவிற்காக கார் ஓட்டியிருக்கிறான், ஆறுமுகம்.

காலையில் ஏழரை மணிக்கு நாயர் கடையில் இட்லி குருமா சாப்பிட்டதுதான். அதற்குப் பிறகு இன்னும் அவன் எதுவும் சாப்பிடவில்லை நல்லமுத்து கொடுத்த ஆப்பிள், ஆரஞ்சு எல்லாம் உணவு வகையில் அவன் கணக்கில் வரவில்லை. பெரிய இடத்தில் கார் டிரைவராக இருந்ததின் பலனாக அம்மாதிரி உயர்ந்த பண்டங்களை ருசிபார்த்ததாக எண்ணினானே தவிர, அவை பசிக்குச் சாப்பிடும் பொருள்களாக அவன் எப்படி எடுத்துக்கொள்வான்? அப்போதே சாப்பிடப் போகலாமா என்று எண்ணினான். உடனே உத்தமநாதப் பிள்ளையின் ஞாபகம் வந்தது. அவர்தானே அவனுடைய பெரிய முதலாளி. அவர் புறப்படும் நேரத்திலே அவன் இல்லாவிட்டால், என்ன ஆவது? முதல் நாளே அவரிடம் கெட்ட பேர் வாங்கிக்கொள்ளலாமா?

என்னோம் ஆனாலும் சரி என்று அப்படியே சாய்ந்துவிட்டான், ஆறுமுகம்!

சில நிமிடங்களில் அவனைக் கூப்பிட்டவண்ணமே வந்தான் குப்பன்.

"என்னப்பா, ஆறுமுகம்! சாப்பிட்டியா?" என்றான் குப்பன்.

குப்பனிடம் எதையும் பேச விருப்பமில்லை ஆறுமுகத்திற்கு. "ஹூம்..." என்று இழுத்து ஒரு பெருமூச்சு விட்டான்.

"என்னப்பா அப்படி அலுத்துப் போய் இருக்கிறே. வா, வா! உனக்கு எடுத்துவைச்ச சாப்பாடு ஆறிப்போகுது"

இந்தச் செய்தி ஆறுமுகத்தின் சோர்விலே திடீர் சுறுசுறுப்பை அள்ளித்தெளித்தது.

"எனக்கா, சாப்பாடு...!" என்று குப்பனை பார்த்து விழித்தவண்ணமே எழுந்தான்.

"ஆமப்பா, உனக்குத்தான். இந்த பங்களாவிலே வேலை செய்யிறவனுக்கெல்லாம் மத்தியான சாப்பாடு இங்கேதானப்பா! வா, போகலாம்!" என்றான் குப்பன்.

சாப்பாடு உண்டா என்று வியப்போடு "ஐயா, வருவாங்களே...!" என்று இழுத்தான்.

"ஐயா அஞ்சு மணிக்குத்தான் வருவாங்களேப்பா, அதுக்குள்ளே சாப்பிட்டு வந்துடலாம்!" என்று கூறி முன்னால் நடந்தான் குப்பன்.

கார் சாவியை எடுத்துக்கொண்டு அவன் பின்னே சென்றான் ஆறுமுகம். (தொடரும்)

பரிமளம் பிக்சர்ஸ்

சொர்க்கவாசல்

கதை, வசனம் : அறிஞர் அண்ணா

இனிய இசையுடன்... கவர்ச்சியான காட்சிகளுடன்

நேர்த்தியான நடிப்புடன்.... அழகு நடையுடன்...

கோதானப்புரட்டு | பழந்தமிழர் நெறி!
பழங்கால விளக்கம் | கலைவலையுடன், மதம்
அருள்விற்கும் அக்ரமம் | அறநெறியின் மாண்பு
போலி சாதுவின் மோசடி | அறப்போர் உள்ளம்
காதலும் கடமையும் | மக்களாட்சி மாண்பு

எனும் பிரச்சினைகளைப் புத்துலக விருந்தாக்கித் தருகிறது.

பார்க்கப் பார்க்கப் பூரிப்புடன் பண்பும் பாடமும் தரும் பேசும் படம்!

அறிவியக்கம் தரும் அரிய விருந்து!

மகிழ்ச்சி பொங்கும்! மதி துலங்கும்!

சொர்க்கவாசல்

சோபிதத்தை சிறப்பிக்க

K.R. ராமசாமி — பத்மினி — அஞ்சலி

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachipambi St., Kancheepuram.